FREE COPY NOT FOR SALE
Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்







மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 10 (19.05.2005) வியாழக்கிழமை இதழ்:232

### பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்திற்கான

# சர்வதேச சமூகத்தின் ஆதரவுக்கு அன்ரன் பாலசிங்கம் வரவேற்பு!



(லண்டன்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக - அரசாங்கமும் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்று சர்வதேச சமூகம் வலியுறுத்திவருவது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நேற்று நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் எரிக் சொல்ஹெய்முடன் நோர்வே வெளியுறவு அமைச்சு அலுவலர் லீசா கோல்டனும் பங்குபற்றினார். இதன்போது தற்போதைய அரசியல் நகர்வுகள் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

பொதுக்கட்டமைப்பு இறுதிவடிவம் கொடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த ஜனாதிபதி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி மிகவும் ஆழமாக மேற்கொள்வதுடன் அதற்கான இறுதி முடிவு ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திடீரென முளைத்த புத்தர் சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு!

(திருகோணமலை)

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் - பஸ்நிலையத்துக்கு முன்பாக, திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான காணியில் கடந்த ஞாயிறு நள்ளிரவு அமைக்கப்பட்ட புத்தர்சிலையை தற்காலிகமாக அகற்றுமாறு திருகோணலை பொலிஸ் தலைமையகத்துக்கு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் கே.கணேசராஜா உத்தரவிட்டார்.

ஞாயிறு நள்ளிரவிற்குப் பின்னர் திருகோணமலை ஐக்கிய ஓட்டோ சாரதிகள் சங்கத்தினரால் நிறுவப்பட்ட புத்தர் சிலையால் கடந்த சில நாட்களாக அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

புத்தர்சிலை உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து - திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை கண்டன கதவடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில் நகரசபை நிர்வாகம் சார்பில் அதன் விசேட ஆணையாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் - சட்ட விரோதமாக - அனுமதியின்றி நகரசபைக்குரிய காணியில் புத்தர்சிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலையைச் சுற்றிவர சிங்களவர்கள் பாதுகாப்பு!

### திருகோணமலையில் பதற்றம் நீடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் பஸ்நிலையம் முன்பாக திடீரென 'புத்தர்சிலை வைக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு தொடர்ந்தும் பதற்றநிலை நீடித்துவருகிறது.

புதிதாக நிறுவப்பட்ட புத்தர்சிலையை அகற்றுமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டபோதும் - பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில் பொலிஸார் புத்தர் சிலையை அகற்றவிடாமல் தடுக்கும் வகையில் அந்தப் பகுதியில் பெருமளவான சிங்கள மக்கள் குவிந்துள்ளனர்.

இதையடுத்து சிலை அமைக்கப்பட்ட பகுதியில் பெருமளவான பொலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்புக்கு எதிராக

### இன்னொரு சடலம் கரையொதுங்கியது!

## துப்பாக்கிச் சூட்டில்

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக

# கொழும்பு,அம்பாறையில் ஆர்ப்பாட்டப் பேரணிகள்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலும் அம்பாறையிலும் பௌத்த பிக்குகள் இன்று ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தவுள்ளனர்.

கொழும்பில் ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றில் விசேட உரையொன்றை ஆற்றிய பின்னர், ஏனைய பிக்குகளுடன் அங்கிருந்து கொழும்பு புறக்கோட்டை அரசமரச்சந்தி விகாரை வரை பாதயாத்திரையை மேற்கொள்ளவுள்ளனர். இதன்பின்னர் இன்று மாலைவரை அங்கு சத்தியாக்கிரகமும் மேற்கொள்ளப்படவுள்ளது.

அம்பாறையில் சிஹலகண்ட என்ற அமைப்பும் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இன்று பேரணியொன்றை நடத்தவுள்ளது. மகாவலி விகாரையிலிருந்து புறப்படும் இந்தப் பேரணி, அம்பாறை மணிக்கூண்டு கோபுரம் வரை செல்லுமென பேரணியின் ஏற்பாட்டாளர் கமுறுப்பிட்டிய பஞ்ஞாசார தேரர் தெரிவித்துள்ளார்.

# ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்தையில் சன நெருக்கடிமிக்க வேளையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பணியாற்றும் மோகன் எனப்படும் முருகுப்பிள்ளை ஆறுமுகம் என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

உயர்பாதுகாப்பு வலயமான மட்டக்களப்பு நகர் சந்தையில் மேற்படி ஈ.பி.டி.பி. உறுப்பினர் - பொலிஸ் பாதுகாப்புடன் சென்று பொருட்களை வாங்கிக்கொண்டிருந்தார்.

அப்போது இவர் மீது இனந்தெரியாதோர் கைத்துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதன்போது ஈ.பி.டி.பி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இன்னொரு சடலம் கரையொதுங்கியது!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தெற்குப் பகுதியில் அழுகிய நிலையில் உருக்குலைந்த சடலம் ஒன்று நேற்றுக்காலை கரையொதுங்கியது.

நேற்றுக்காலை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் இருப்பதைக் கண்டு நெடுந்தீவு பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

நேற்றுமதியம் சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்துறை நீதிவான் அ.பிறேம்சங்கர் விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

# காணாமற்போன சிப்பாய் சடலமாக மீட்கப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

கிளாலி பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை காணாமற்போன இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்தப் பகுதியிலுள்ள வடலியொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை நீண்டதூர ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை 21 வயதுடைய சிப்பாய் ஒருவர் காணாமற்போயிருந்தார்.

பயிற்சி முடிந்த பின்னர் காணாமற்போன சிப்பாயைத் தேடியவேளை வடலிக்குள் சடலமாக இருந்தமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கிச் சூட்டில் சூரியமூர்த்தி படுகாயம்!

(திருகோணமலை)

திருமலை முன்னாள் நகரசபைத் தலைவர் பெரியபோடி சூரியமூர்த்தி நேற்றிரவு 9.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை விகாரை வீதியில் அமைந்துள்ள இவரது வீட்டிற்கு முன்பாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவர் தனது வீட்டிற்கு முன்னால் தனது நண்பரொருவருடன் கதைத்துக் கொண்டிருந்தவேளை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேரடங்கிய குழுவினர் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளதாக இவரது வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் பெண்மணி பொலிஸாருக்கு வாக்கு மூலம் கொடுத்துன்னார்.

வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூடுபட்ட இவர் பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் திருமலை பொது வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (10)

# சிவராம் அஞ்சலி நிகழ்வில் பெருமளவானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களினதும், கலை இலக்கியவாதிகளினதும் ஏற்பாட்டில் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமிற்கான அஞ்சலிக்கூட்டம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் - யாழ். ஊடகவியலாளர் பயிற்சி மைய இணைப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மேஜர் நிரஞ்சனின் தந்தையார் தம்பிராசா ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றினார்.

தொடர்ந்து அரங்க அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாமனிதர் சிவராமின் திருவுருவப் படத்துக்கு மாமனிதர் அரசு, யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ.சிறில் ஆகியோர் சுடரேற்றினர். மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபலரத்தினம் மலர் மாலை அணிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வீதித் தடைகளை உடன் அகற்றுக!

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் வீதித் தடைகளை அகற்றி, வீதிவிபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

வீதிகளின் இரு மருங்கிலும் நடைபாதைக்கானதடைகளை அகற்றுதல், விசேடமாக பொதுச் சந்தைகளுக்கு முன்னாலுள்ள வீதிகள், பிரதான பாதைகளில் உள்ள கடைத் தொகுதிகள், மக்களின் நடைபாதைகள் என்பன வியாபாரப் பொருட்களினால் தடைசெய்யப்பட்டு இருக்கின்றன. அவற்றினால் மக்கள் வீதிகளின் நடுவே பயணிக்க வேண்டியுள்ளது. அவற்றினை அடையாளம் கண்டு அகற்றுதல், போக்குவரத்துக் குறியீடுகளை மறைக்கும் விளம்பரங்களை அகற்றுவதுடன், அகற்றுவதற்கான அனுமதிகளை இரத்துச் செய்தல்.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கக் கூடியவாறு தனிப்பட்டவர்களால் வீதியோரங்களில் குவிக்கப்படும்கற்கள், மணல்கள் ஆகியவற்றை விரைவில் அகற்றுதல், கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு வழமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் கட்டாக்காலி கால்நடைகளை, வீதிகளில் நடமாடாமல் செய்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பிரதான சந்திகளில், வீதிகளில் பொருத்தமான வாகனத் தரிப்பிடங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொண்டு, வீதி விபத்துக்களைக் குறைக்க வழிவகைகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (63)

## பல்கலை மாணவருக்கான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மதியம் 12 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டமானது நேற்று நடைபெற இருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை எனவும் - மாணவர்களின் பிரச்சினை தொடர்பான முக்கியமாக கலந்துரையாடவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் கூட்டத்தில் பங்குபற்றுமாறு மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## சோமஸ்கந்த கல்லூரியில் நாயன்மார்கள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலுள்ள சோமஸ் கந்தர் ஆலயத்தில் இடம்பெறும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், முருகநாயனார், திருநீலநக்கநாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் ஆகியோரது குருபூசைகள் இடம்பெறவுள்ளன.

இ.பகீரதியின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## முன்பள்ளி முதன்மை ஆசிரியருக்கான இரண்டு நாள் வலுவூட்டல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன்- முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும், ஐ.ஓ.எம். நிறுவனமும் இணைந்து யாழ். மாவட்ட முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி இரண்டாவது நாளாக இன்றும் புங்குடுதீவிலுள்ள சர்வோதய நிறுவனத்தில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவனேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கை ஐ.ஓ.எம். நிறுவனத்தின் உதவித் திட்ட அலுவலர் இராசேந்திரன், தீவக இணைப்பாளர் யாழினி, முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொடியினை வடகிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையச் செயலாளர் கா.கணேசலிங்கம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய கொடியை ஐ.ஓ.எம். நிறுவனத்தின் திட்ட அலுவலர் கா.உதயகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

சிறப்புரையை வடகிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையச் செயலாளர் கா.கணேசலிங்கம், ஐ.ஓ.எம்., நிறுவனத் திட்ட அலுவலர் கா.உதயகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், வலிகாமம் அபிவிருத்தி, புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், முன்பள்ளிக் கணக்காளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தூயஒளி கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(கொக்குவில்)

1986 ஆம் ஆண்டு மண்டைதீவில் வைத்துப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவாக குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் தூயஒளி கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்த முன்வந்துள்ளது.

இப்போட்டி குருநகர் புனித சூசையப்பர் கழக ஆதரவுடன்- யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை, யாழ் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் நடத்தப்படுகிறது.

முதலாவதாகத் தெரிவாகும் கழகத்திற்கு 10 ஆயிரம் ரூபா பணமும், சுற்றுக் கிண்ணமும் வழங்கப்படவிருக்கிறது.

இரண்டாவதாகத் தெரிவு செய்யப்படும் கழகத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும், சுற்றுக் கிண்ணமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்பாகச் செயலாளர் அ.பெனடிக்ற் ராதா, 16 - ஜஸ் பிளான்ற் வீதி, குருநகர் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (206)

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(காரைநகர்)

கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. நடராசா மண்டபத்தில் நடைபெறும். (52)

## கோப்பாய் பிரதேச அபிவிருத்தி குறித்து பொதுமக்களிடம் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசத்தில் முன்னெடுக்கவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விசாரணைகளையும், கருத்துக்களையும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு கோப்பாய்ப் பிரதேச செயலகம் கோரியுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், கோப்பாய் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்வந்துள்ளதையடுத்து, பிரதேசத்தில் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கருத்துக்களை வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அந்தப் பகுதி கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு அச்சுவேலி சமுர்த்தி வலய அலுவலகத்திலும், பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் சமுர்த்தி வலயத்திலும் நடைபெறவுள்ளது. (90)

## பயிர்ச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகளை பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் மிதிவெடி அகற்றப்பட்ட பகுதிகளில் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளவுள்ளோர் தமது விபரங்களைப் பதிவு செய்யுமாறு அரியாலை விவசாய சம்மேளனம் கோரியுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கொட்டுக்கிணறு, ஈசன் காடு ஆகிய பகுதி வயல் நிலங்களை இராணுவத்தினர் கையளித்துள்ளனர்.

இந்த நிலங்களில் பயிர்செய்ய விரும்பும் காணிச் சொந்தக்காரர், உரித்தாளர்கள், காணி அமைந்துள்ள இடம், காணியின் பரப்பு, உறுதி இலக்கம், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் பதிவு செய்யுமாறு அரியாலை விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் காணி உரிமையாளரின் அனுமதியுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபடவிரும்புபவர்கள் காணியின் உரிமையாளரின் அனுமதிக் கடிதத்தைப்பெற்று சட்டத்தரணி அதனை சிபார்சு செய்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.












## ஏகாதசி விரதம்

(கொக்குவில்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை ஏகாதசி விரதபூசை நடைபெறும்.

இறுதியாக நாகேஸ்வரர் திருவீதி எழுந்தருளலும், பிரசாதமும் வழங்கலும் நடைபெறும். (206)

## தையல் கண்காட்சி

(காரைநகர்)

கலட்டி செவிப்புலன் வலுவுற்றோர் நிறுவனத்தில் நடைபெற்றுவந்த தையல் வகுப்புக்கான தையல் கண்காட்சி இன்று காலை 10 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (52)


# வடமாகாண அதிபர்கள் சங்கம் நடத்தும் துரித மீட்டல் செயலமர்வு

அனுசரணை வழங்குவோர்:-

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை

யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு

யாழ்.மத்திய கல்லூரி லியோ கழகம்

**16, 17, 18, 19, 20 மே - 2005**

**யாழ்.மத்திய கல்லூரி – 17, 18, 19 மே 2005**
- யாழ், வலிகாமம், தீவக மாணவர்களுக்கு

**நெல்லியடி மத்திய கல்லூரி – 17, 18, 19 மே 2005**
- வடமராட்சி, தென்மராட்சி, மாணவர்களுக்கு

**கிளிநொச்சி மத்திய கல்லூரி – 16, 20 மே 2005**
- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு

## PROGRAMME TIME TABLE

8.00 am - 8.15 am : Registration
8.15 am - 8.30 am : Inauguration

| TIME | JAFFNA | | | NELLIADY | | |
|---|---|---|---|---|---|---|
| | 1st Day | 2nd Day | 2nd Day | 1st Day | 2nd Day | 2nd Day |
| 8.30 am - 10.30 am | phy - I | Che - I | Com.M/Bio - I | Com.M/Bio - I | Phy - I | Che - I |
| 10.30 am - 10.45 am | Tea | Tea | Tea | Tea | Tea | Tea |
| 10.45 am - 12.45 am | phy-II | Che-II | Com.M/Bio-II | Com.M/Bio-II | Phy-I | Che-II |
| 12.45 am - 1.30 am | Lunch | Lunch | Lunch | Lunch | Lunch | Lunch |
| 1.30 am - 3.00 am | phy-III | Che-III | Com.M/Bio-III | Com.M/Bio-III | Phy - I | Che - III |
| 3.00 am - 3.15 am | Tea | Tea | Tea | Tea | Tea | Tea |
| 3.15 am - 5.00 am | phy-IV | Che-IV | Com.M/Bio-IV | Com.M/Bio-IV | Phy - I | Che-IV |

விரிவுரையாளர்கள்

இணைந்த கணிதம்: திரு.S.பிரேம்நாத், திரு.A.குணசிங்கம், இரசாயனவியல்: திரு.S.தில்லைநாதன், திரு.இராஜதேவா
பௌதிகவியல்: திரு.S.கணேசன், திரு.S.P.குணசீலன், உயிரியல்: திரு.V.குகாதரன், திரு.சு.ஈஸ்வரதாஸன்

ஊடக அனுசரணை:- நமது ஈழநாடு

## கொடிகாமத்தில்

# புலிகளின் அலுவலகத்தை சோதனையிட்ட எட்டு பொலிஸாருக்கு சம்பள வெட்டு!

(கொழும்பு)

கொடிகாமத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்குத் தெரிவிக்காமல், எவ்வித அனுமதியுமின்றி சோதனை செய்த தான குற்றச்சாட்டில், குற்றவாளிகளாகக் காணப்பட்ட சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைந் சேர்ந்த எட்டு பொலிஸாரின் ஒருநாள் சம்பளத்தை வெட்டுமாறு வன்னி பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் வடக்கு பிரதேச பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் விதந்துரைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்த எட்டு பொலிஸாரின் செயற்பாடுகள் பிழையானதெனபதிவுக் குறிப்பிலும் பதியப்படவேண்டுமெனவும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார்.


யாழ். பகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இது தொடர்பாக விசாரணை நடத்தி சமர்ப்பித்த அறிக்கையைக் கவனத்திலெடுத்த பின் பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் பதுங்குகுழி இருப்பதாகவும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களின் இந்த நடவடிக்கையை எதிர்த்து யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்குச் செய்த முறைப்பாட்டையடுத்து இந்த விசாரணை நடைபெற்றது. (தே)

## மக்கள் ஆணைதந்தாலே அரசைப் பொறுப்பேற்போம்!

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

ஜனாதிபதியோ பிரதமரோ ஆட்சியைக் கையளிக்க முன் வந்தால் அதை ஏற்றுக்கொள்ள ஐக்கியதேசியக்கட்சி தயாராக இல்லை. மக்கள் எம்மிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தால் மட்டுமே நாம் அதை ஏற்றுக்கொள்வோம் என பேராசிரியர் ஜி.எஸ்.பீரிஸ் தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பு மின்சாரமறுசீரமைப்பு போன்ற முக்கிய விடயங்களில் அரசின் கூட்டமைப்புக் கட்சியான ஜே.வி.பி இணக்கத்துக்கு வராமல் முரண்டு பிடித்துவரும் நிலையில் அரசாங்கத்தை கொண்டு நடத்துவது சிரமமாக உள்ளதால் ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்து விடுவது நல்லது என்று பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பாகவே பேராசிரியர் பீரிஸ் மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளார்.

## பொதுக்கட்டமைப்பு குறித்த

# அரசாங்கத்தின் முடிவுக்கு இ.தொ.கா வரவேற்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் அரசின் முடிவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்றுள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது எமது முக்கிய பணி. இந்தப் பணிக்கு பொதுக்கட்டமைப்பு மிகவும் அவசியம்.

இந்தப் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதோடு, அமைதிப் பேச்சுக்களையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறோம்.

அமைதிப் பேச்சுக்களை வலுப்படுத்துகிற இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சாதகமான நிலையை மேற்கொள்ளாதது துரதிஷ்டவசமானது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையையும் பரிசீலிக்க முன்வந்தது.

ஆனால் தற்போது நடைமுறைகள் உள்ளிட்டவற்றைப் பேசி அரசியலாக்குகிறது.

அனைத்துக் கட்சிகளும் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் ஒருங்கிணைந்து நிற்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## ஜே.வி.பி எம்.பியின் அலுவலகம் பொலிஸாரால் சோதனை

(கொழும்பு)

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரனின் ஹற்றன் தொழிற்சங்க அலுவலகத்தை பொலிஸார் பலாத்காரமாக சோதனையிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9 மணியளவில் ஹற்றன் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான குழுவொன்று தமது அலுவலகத்தைச் சோதனையிட்டதாக அவர் தெரிவித்தார்.

(01)

# சிவராமின் கொலை தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்படவேண்டும்

## கண்டி கூட்டத்தில் கோரிக்கை

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலை தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என, எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் கேட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளிடம் இந்தக் கோரிக்கை எழுத்து மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள் நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்தப்படும் உடல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் கொலைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் உலகவங்கி மற்றும் மாநாட்டில் பங்கேற்கும் பல நாட்டுத்தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதில் ஊடகவியலாளர்களான நிமலராஜன் மயில்வாகனம், ஐயாத்துரை நடேசன், ரோஹன குமார, நடராஜா அற்புதராஜா மற்றும் அந்தனி மரியநாயகம் ஆகியோர் கடந்த 4 வருடகாலப்பகுதியில் கொல்லப்பட்டபோதும், அது தொடர்பாக இதுவரை இலங்கை அதிகாரிகள் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோமென ஆசிரிய தொழிற்சங்கம் எச்சரிக்கை

ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பான சுற்றுநிருபத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யாவிட்டால், நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ஆசிரியர் தொழிற் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுமாறு சகல தேசிய பாடசாலை ஆசிரியர்களையும், ஆசிரியர் தொழிற்சங்கம் கோரியுள்ளது.

ஆசிரியர்களுக்கான பதவியுயர்வு தொடர்பாக கல்வியமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் காணப்படும் ஒழுங்கீனங்களைத் திருத்தியமைக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜெயசூரிய, தற்பொழுது கல்வியமைச்சுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளுமென நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் தரம் 1 இற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள 2 லட்சம் ஆசிரியர்கள் கடந்த 10 வருடகாலமாகப் பதவியுயர்வு கிடைக்காமல் காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிலிருந்து இலங்கை திரும்ப அறுபதாயிரம் அகதிகள் விருப்பம்!

(சென்னை)

கடந்த கால போர் காரணமாக இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தங்கியுள்ள அகதிகளில் 60 ஆயிரம் பேர் மீளவும் இலங்கைக்குத் திரும்புவதற்கான நிலையில் உள்ளதாகவும், இவர்களை விட 14 ஆயிரம் அகதிகள் சட்டரீதியற்ற முறையில் நாடு திரும்பியுள்ளதாகவும், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஏ.எஸ்.குணசிங்கம் தெரிவித்தார்.

ஐ.நாவின் யு.என்.எச்.சி.ஆர். அமைப்பு இதுவரை தமிழ்நாட்டிலிருந்து 3 ஆயிரம் அகதிகளை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளது. அவர்களது இந்த வருடத்துக்கான இலக்கு 6 ஆயிரம் பேரை மீளக் கொண்டு வருதலாகும்.

அகதிகள் விடயத்தில், இரண்டு நாட்டு அரசாங்கங்களும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தால், மேலும் அகதிகளை தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவர யு.என்.எச்.சி.ஆர். உறுதியளித்துள்ளது.

தென்னிந்தியாவில் மீளத் திரும்பும் நிலையிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை விரைவில் இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய அரசை வற்புறுத்துமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு கடிதம் எழுதியிருக்கிறது.

அத்துடன் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பும் அகதிகள் தங்குவதற்கு இடைத் தங்கல் முகாம் எதுவும் அமைக்கப்படமாட்டாதெனவும், வட - கிழக்குப் பகுதியில் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் மீளக் குடியேறும்போது வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் போல் இவர்களுக்கும் வழங்குவதுடன், அவர்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான சில உதவிகளும் வழங்கப்படுமென அவர் தெரிவித்தார்.

எனினும் தமிழ் நாட்டிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பப் பெருமளவு அகதிகள் ஆர்வமாக உள்ளபோதிலும், இவ்வளவு தொகையானோரை யு.என்.எச்.சி.ஆர் விரைவில் கொண்டுவருமென எதிர்பார்க்க முடியாது.

இவர்களை மீள அழைத்து வர சம்பந்தப்பட்ட அமைச்சே உரிய கவனம் செலுத்தவேண்டும். இல்லையெனில் சட்ட ரீதியற்ற வகையில் அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவது தொடர்ந்து கொண்டே இருக்குமென அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# எவர் எதிர்த்தாலும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்

## அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ

எவர் எதிர்த்தாலும் மக்களுக்காக நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கப் போவதாக அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார். நேற்றுமுன்தினம் பாலக்குடா பிரதேசத்தில் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதைத் தெரிவித்தார்.

யார் எதிர்த்தாலும் நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கவேண்டும். இந்தத் திட்டத் தின் மூலம் நாட்டுமக்களுக்குக் கிடைக்கும் நன்மையே முக்கியமானது. தனிப்பட்டவர்களது அரசியல் நன்மைகளை அடிப்படையாகக்கொண்டு இந்தத் திட்டத்தை எதிர்ப்பது தவறானது எனத் தெரிவித்தார்.

இதேவேளை நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அனல் மின் உற்பத்தி நிலையம் நிறுவப்படுவது ஊடாக - கல்பிட்டி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் என முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பாயிஸ் தெரிவித்தார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில்

# சிறுவர் பூங்காக்களை புனரமைக்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள 100 சிறுவர் பூங்காக்களை புனரமைக்க அமெரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கான நிதியுதவி புஷ் - கிளின்டன் ஹவுஸ்டன் சுனாமி நிவாரணப் பணி எனும் அமைப்பினூடாக வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர்களும், உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனமான சர்வோதயா அமைப்பும் இணைந்து இந்தச் செயற்திட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பூங்காக்களை அமைத்துக்கொடுப்பதன் மூலம் - சுனாமி அனர்த்தத்தால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர முடியுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லங்ஸ்ரீட் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச நாடுகளின் நிபுணர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசாங்க அதிகாரிகள் பலரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

# எலகெர சரணாலய பகுதியில் மோதல் இருவர் பலி - மேலும் இருவர் காயம்!

(கொழும்பு)

எலகெர சரணாலயப் பகுதியில் கிராமவாசிகளுக்கும், வனவளத் திணைக்கள அலுவலர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வனவளத் திணைக்கள அலுவலர்கள் முனைந்த வேளையிலேயே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் காரண மாக அந்தப் பகுதியில் பதற்றமேற் பட்டது.

எலகெர பிரதேச செயலாளர் மற்றும் பொலநறுவ மேலதிக மாவட்ட மேலதிக செயலாளர் ஆகியோரிடமிருந்து கிடைத்த தகவல் ஒன்றையடுத்து- சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த குழுவைப் பிடிக்க முற்பட்டவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தவேளையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே ஒரு கிராமவாசி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற வனவள அலுவலர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், அதில் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோபமடைந்த கிராமவாசிகள் வனவளத் திணைக்கள அலுவலகத்தைச் சேதமாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரதி அமைச்சுப் பதவியிலிருந்து மஹிந்தானந்த விலகவுள்ளாராம்

மின்சார மற்றும் எரிபொருட்துறை பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனது அமைச்சுப் பதவியிலிருந்து பதவி விலகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலையையடுத்தே அமைச்சர் தனது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பான பிரேரணையைத் தயாரிக்கும் பொறுப்பை தொழிற்சங்கங்களிடம் ஒப்படைத்தமையே அமைச்சரின் விசனத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. (01)

## பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடர்

# மேற்கிந்திய அணியிலிருந்து பிரைன் லாறா நீக்கப்பட்டார்!



(செயிண்ட்ஜோன்ஸ்)

பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து முன்னாள் கப்டன் லாறா நீக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் தென்னாபிரிக்காவுடன் ஒரு நாள் தொடரை 0-5 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் இழந்தது. அடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ளது. இங்கு 3 ஒருநாள் போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் பங்கேற்கிறது.

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நாளை செயிண்ட்ஜோன்ஸில் நடைபெறவுள்ளது. அடுத்த இரு ஆட்டங்கள் முறையே 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. ஒரு நாள் போட்டிக்கான 11 பேர்கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

சந்தர்போல் தொடந்து கப்டனாக நீடிக்கிறார். இதில் புகழ்பெற்ற நட்சத்திர வீரர் பிரைன் லாறா நீக்கப்பட்டுள்ளார். அதேசமயம் ஆரம்ப வீரர் வெவல் ஹிண்டஸ், வேகப்பந்து வீச்சாளர் பெட்ரோ கொலின்ஸ் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளனர்.

லாறா நீக்கம் குறித்து தேர்வுக் குழு அமைப்பாளர் மைக்கல் காரேவ் கூறும்போது -

பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடரைக் கருத்திற்கொண்டு லாறாவுக்கு ஒருநாள் தொடருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

அணி விபரம் வருமாறு:-

சந்தர்போல் (கப்டன்), கெய்ல், சேவியர் மார்ஷல், ருனகோ 'மோர்டன், சர்வாண், வெவல் ஹிண்டஸ், வெய்ன் சுமீத், பிராவோ, பிரவ்ன், கொலிமோ, டேரன் பவல், பெட்ரோ கொலின்ஸ், பிராட்ஷோ.

## இந்தியாவுடனான கிரிக்கெட் தொடர்

# இடங்களைத் தெரிவுசெய்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை!

எதிர்வரும் ஜனவரி மாதம் பாகிஸ்தானில் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது இந்திய கிரிக்கெட் அணி.

அப்போது எங்கெங்கு போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்பதை இந்திய கிரிக்கெட் சபைக்கு பரிந்துரைத்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

துறைமுக நகரான கராச்சி, ராவல்பிண்டி, லாகூர் ஆகிய இடங்களில் டெஸ்ட் போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறை பாகிஸ்தான் சென்றபோது கராச்சி, பெஷாவர் ஆகிய இடங்களில் இந்தியா விளையாட மறுப்புத் தெரிவித்திருந்தது. இதையடுத்து அந்த இடங்களில் ஒருநாள் போட்டிகளில் இந்தியா விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கராச்சி, லாகூர், பெஷாவர் , பைசலாபாத் மற்றும் முல்டான் ஆகிய இடங்களில் ஒருநாள் போட்டிகளை நடத்தலாம் என இந்திய கிரிக்கெட் சபையிடம் முன்மொழிந்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் 'தி டான்' பத்திரிகையில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

ராவல்பிண்டியில் உள்ள பிண்டி ஸ்ரேடியம் விளையாடுவதற்கு ஏற்ற தகுதியைப் பெறாவிட்டால், அங்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள டெஸ்ட் போட்டியைப் பைசலாபாத்துக்கு மாற்றவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# கெல்லி ஹோம்ஸ், பெடரர் லாரஸ் விருதைப் பெற்றனர்



சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரெனிஸ் வீரர் ரோஜர் பெடரர் ஆடவர் பிரிவிலும், இங்கிலாந்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை கெல்லி ஹோம்ஸ் மகளிர் பிரிவிலும் 6 ஆவது ஆண்டு லாரஸ் உலக விளையாட்டு விருதைப் பெற்றனர்.

2004 ஆம் ஆண்டில் 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை பெற்றதற்காக ரோஜர் பெடரர் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒலிம்பிக் போட்டியில் 6 தங்கப் பதக்கங்களை வென்ற நீச்சல் வீரர் மைக்கேல் பிஹெல்ப்ஸ் - மொரோக்கோவைச் சேர்ந்த நீண்ட தூர ஓட்டப் பந்தய சம்பியன் ஹிக்கம் எல் குரோஜ், அமெரிக்காவைச் சேர்ந்த சைக்கிள் சம்பியன் லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங் ஆகியோர் ஆடவர் பிரிவில் பெடரருக்கு சவாலாகத் திகழ்ந்தனர்.

கார்பந்தய வீரர்களான ஜேர்மனியின் மைக்கேல் ஷூமேர்க்கர், இத்தாலியின் வெலன்டினோ ரோஸி ஆகியோரும் ஆடவருக்கான விருதுப் போட்டியில் முக்கிய பங்காற்றினர்.

பிரெஞ் ஓபன் போட்டியில் பட்டம் வென்ற உலகின் முதல் நிலை வீரராக நீடிப்பதே எனது தற்போதைய இலட்சியம் என பெடரர் விருதுபெற்ற பின் கூறினார்.


ரஷ்யாவைச் சேர்ந்த போல் வால்ட் வீராங்கனை யெலீனா இசின்பயேவா, சுவீடன் ஹெப்டதலான் கரோலினா கிளஃப், ஹொலன்டைச் சேர்ந்த லியோன்டீன் வான் மூர்செல், ரெனிஸ் வீராங்கனை மரிய ஷரபோவா, சுவீடன் கோல்ஃப் சம்பியன் அன்னிகா சோரென்ஸ்டம் ஆகியோர் மகளிர் பிரிவில் கெல்லி ஹோம்ஸுக்கு போட்டியாக விளங்கினர்.

யூரோ- 2004 போட்டியில் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த கிரிஸ் உதைபந்தாட்ட அணி உலகின் சிறந்த அணிக்கான விருதைப் பெற்றது. உலகின் புதிய இளம் வீரராக சீனாவைச் சேர்ந்த லியு ஷியாங் தேர்வு பெற்றார். ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் அவர் 110 மீற்றர் தடை ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தை கைப்பற்றி பலரையும் ஆச்சரியுமடையச் செய்தது குறிப்பிடத்தக்கது.

ரெனிஸ் வீரர் போரிஸ் பெக்கர், கிரிக்கெட் வீரர் இயன் பொத்தம், ருமேனிய ஜிம்னாஸ்டிக் வீரர் நதியா கமானெசி உட்பட லாரஸ் விளையாட்டு அக்கடமியில் உள்ள 40 ஜாம்பவான்கள் இந்த விருதுக்குரியவர்களை தெரிவுசெய்தனர்.

# தாவூத் இப்ராகிமுடன் அசாருதீனுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததாம்!

## இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் செயலாளர் கூறுகிறார்



(புதுடெல்கி)

மும்பை தொடர் குண்டுவெடிப்பு தாதா தாவூத் இப்ராகிமுக்கும் - அசாருதீனுக்கும் தொடர்பு இருந்ததாக முன்னாள் இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் ஜெயவந்த்லீயே கூறியுள்ளார்.

மும்பை தொடர் குண்டுவெடிப்புகளில் முக்கிய குற்றவாளியாகத் தேடப்படுபவர் தாவூத் இப்ராகிம். மும்பை நிழல் உலக தாதாவாக வாழந்த அவர், தற்போது பாகிஸ்தானில் தலைமறைவாக வாழ்ந்துவருகிறார்.

இந்த நிலையில் தாவூத் இப்ராகிமுடன் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு தொடர்பு இருந்ததாக முன்னாள் கிரிக்கெட் சபை செயலாளர் ஜெயந்த்லீயே பரபரப்பாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது-

தாவூத் இப்ராகிம் 1980 ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு கார்களைப் பரிசாக வழங்கியுள்ளார். அதுவும் டொயாட்டா கார். அணியின் உடற்பயிற்சியாளர் உட்பட அனைவருக்கும் வழங்கினார்.

முன்னாள் கப்டன் அசாருதீனுக்கும், இப்ராகிமுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இருவரும் நண்பர்கள். தாவூத்துக்கு மும்பை தொடர் குண்டுவெடிப்பில் தொடர்பு உண்டு எனத் தெரிந்தபிறகே அவர் ஒரு பெரிய தாதா என்பது எங்களுக்குத் தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு குரொன்ஜே தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அப்போது நடந்த ஆட்டத்தில் குரொன்ஜே, அசாருதீன், ஜடேஜா, போஜே உட்பட 5 பேர் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் அசாருதீன், ஜடேஜா சர்வதேச போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் ஜெயந்த்லீயே கூறிய குற்றச்சாட்டில் இந்த விவகாரம் பூதாகரமாக வெடிக்கும் என்று தெரிகிறது. கிரிக்கெட் வீரர்களுடன் தொடர்பு வைத்திருந்ததால் தாவூத் இப்ராகிம் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

## விளையாட்டு

# ஐந்தாவது சுற்று ஆட்டத்திலும் ஆனந்த சமநிலையே பெற்றார்

(லண்டன்)



பல்கேரியாவில் உள்ள சோஃபியாவில் நடைபெற்றுவரும் எம்டெல் மாஸ்டர்ஸ் செஸ் சம்பியன் போட்டியின் 5 ஆவது சுற்றிலும் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமநிலை பெற்றார்.

கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற 5 ஆவது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கல் ஆதம்ஸுடன் விளையாடினார் ஆனந்த். இந்தப் போட்டியில் வெற்றி பெறும் ஆவலுடன் உள்ள ஆனந்த் 54 நகர்த்தல்கள் வரை ஆதம்ஸைத் தோற்கடிக்கப் போராடிப் பார்த்தார்.

ஆனால், வெற்றி சாத்தியமாவதற்கான அறிகுறிகள் தென்படாமல் போகவே சமனிலை உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

இன்னும் 5 சுற்றுகள் மீதமுள்ளன. ஆனந்த் இது வரை 2.5 புள்ளிகளைச் சேர்த்து இரண்டாம் இடத்தில் உள்ளார்.

அதேசமயம் மகளிர் பிரிவில் உலகின் முதல்நிலை வீராங்கனையாகத் திகழும் ஹங்கேரியின் ஜூடிச் போல்கரைத் தோற்கடித்து முழுப் புள்ளியைப் பெற்றார். ரஷ்யாவைச் சேர்ந்த விளாடிமர் கிராம்னிக். இவரும் மைக்கேல் ஆதம்ஸும் தலா 3 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

உள்ளூர் வீரர் வாசெலின் தபலோவைத் தோற்கடித்து ஒரு புள்ளியைப் பெற்றார் உக்ரைன் வீரர் ரஸ்லன் போனமரியோவ். இதையடுத்து தனது புள்ளிக் கணக்கை 2.5 ஆக உயர்த்திக் கொண்டு ஆனந்துடன் இரண்டாம் இடத்தில் உள்ளார் அவர்.

## பாகிஸ்தானில் நடைபெறும்

# தெற்காசிய ரெனிஸ் போட்டியில் சானியா மிர்சா பங்கேற்கிறார்!

(லாகூர்)

பாகிஸ்தானில் நடத்தப்படும் தெற்காசிய ரெனிஸ் போட்டியில் சானியா மிர்சா கலந்துகொள்கிறார். இந்தியாவின் ரெனிஸ் புதிய நட்சத்திரமாக இளம் வீராங்கனையாக சானியா மிர்சா உருவெடுத்துள்ளார்.

அவர் முஸ்லிம் என்பதால் பாகிஸ்தானில் அவருக்குப் புகழ் ஏற்பட்டுள்ளது. அவருக்கென ரசிகர் வட்டாரமும் உருவாகியுள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு சானியா மிர்சாவை அழைத்து அங்கே சில காட்சிப் போட்டிகளில் விளையாடவைப்பதற்கு சில அமைப்புகள் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

பாகிஸ்தானைச் சேர்ந்த ரெனிஸ் வீராங்கனை நீதா வசிம் - சானியா மிர்சா ஆகிய இருவருக்கும் இடையில் கராச்சியில் போட்டி நடத்த அந்த விளையாட்டு அமைப்புகள் முடிவு செய்திருக்கின்றன.

இந்த ரெனிஸ் போட்டியை நடத்துவதற்கு முயற்சியெடுத்துவரும் விளையாட்டு அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில் -

இந்தியா - பாகிஸ்தான் பிராந்தியத்தில் சானியா மிர்சா ரசிகர்களுக்குப் பிடித்தமான ரெனிஸ் வீராங்கனையாகத் திகழ்கிறார். எனவே, அவரைப் பாகிஸ்தானுக்கு அழைத்து விளையாடவைத்தால் இங்கே ரெனிஸ் மீது பொதுமக்களுக்கு மேலும் ஆர்வம் ஏற்படும் என்று தெரிவித்தார்.

சானியா மிர்சா தன்னுடைய தோள்பட்டை வலி பிரச்சினையில் இருந்து இப்போது மீண்டுகொண்டிருக்கிறார். அவர் பிரெஞ் ஓபன் ரெனிஸில் சாதனை புரியவேண்டும் என்ற நோக்கத்துடன் தீவிர பயிற்சி மேற்கொண்டுவருகிறார். எனவே, அந்தப் போட்டி முடிந்தபிறகு சானியா மிர்சா பாகிஸ்தான் சென்று விளையாடக் கூடும்.

அவரோடு காட்சிப் போட்டியில் விளையாடவுள்ள நீதா வசிம் பாகிஸ்தானில் முதல்தர ரெனிஸ் வீராங்கனையாவார். தற்போது நீதா அமெரிக்காவில் படித்துக்கொண்டிருக்கிறார். இந்த இருவருடன் சேர்த்து இலங்கை, பங்களாதேஷ் நாட்டு வீராங்கனைகளையும் அழைத்து அந்தப் போட்டியில் விளையாடச் செய்வதற்கும் அந்தப் போட்டியை தெற்காசிய சம்பியன் ஷிப் போட்டிபோல நடத்துவதற்கும் அமைப்பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.



சானியா மிர்சா ஏற்கனவே ஒரு முறை பாகிஸ்தானுக்கு சென்று விளையாடியுள்ளார். இஸ்லாமாபாத்தில் சர்வதேச ஜூனியர் ரெனிஸ் போட்டி நடந்தபோது அதில் இந்தியா சார்பாக சானியாவும் பங்குகெடுத்துக்கொண்டார். 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட வீராங்கனைகளைக்கொண்ட இந்திய அணியில் சானியாவும் இடம்பிடித்து பாகிஸ்தானுக்குச் சென்று அப்போது விளையாடினார்.

# பெண்கள் தரவரிசையில் டேவன் போர்ட் முதலிடம்!

(மியாமி)

பெண்களுக்கான புதிய டபிள்யூ.டி.ஏ ரெனிஸ் தரவரிசைப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் அமெரிக்காவின் டேவன் போர்ட் 5 ஆயிரத்து 169 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா இரண்டாவது இடத்தில் இருக்கிறார். பிரான்ஸின் அமெலி மவுரிஸ்மோ மூன்றாவது இடத்திலும், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

முதல் 20 இடங்களில் ரஷ்ய வீராங்கனைகளின் ஆதிக்கமே காணப்படுகிறது. இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்ஷா 464 புள்ளிகள் பெற்று 72 ஆவது இடத்தில் இருக்கிறார். பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 12 ஆவது இடத்தில் உள்ளார். அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 13 ஆவது இடத்தில் உள்ளார்.

# தென்னைகளில் பரவும் மைற் நோயை இயற்கை மருந்துகளால் கட்டுப்படுத்தலாம்

## தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்யேந்திரா

(யாழ்ப்பாணம்)

தென்னைமரங்களில் தற்போது பரவிவரும் மைற் எனப்படும் நோயை இயற்கை முறையிலான மருந்துகளைப் பாவித்து குறைந்த செலவில் கூடிய பயனை அடையலாம் என, தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்யேந்திரா தெரிவித்தார்.

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விவசாயிகளுக்கான வலுவூட்டல் பயிற்சி வகுப்புக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்- இந்த நோயைக் கட்டுப்படுத்த 20 கிராம் உள்ளி, 5 கிராம் சவர்க்காரம், 20 மில்லிலீற்றர் வேப்பெண்ணை, 100 மில்லிலீற்றர் தண்ணீர் ஆகியன சேர்த்த கரைசலை தென்னம்பாளை விரிந்தவுடன், ஸ்பிறே மூலம் தெளித்து, $1\frac{1}{2}$ மாதத்துக்கு ஒரு முறை 2,3 தடவைகள் தெளித்து வர இந்த நோய் முற்றாக இல்லாமல் போய், நல்ல விளைச்சலைக் கொடுக்கும்.

மற்றும் வட்டெலி, கருவண்டு, செவ்வண்டு போன்றவற்றின் பாதிப்புகளும் இந்தக் கரைசல் தெளிப்பினால் இல்லாமல் போய்விடும் எனவும் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி வகுப்பில் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் வி. செல்வரத்தினம் - மாமரத்தில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தல், வெங்காயச் செய்கையில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமாக விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

இந்த வலுவூட்டல் பயிற்சி வகுப்புகள் அரச திணைக்களங்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டது. (48)

# கலாபூஷணம் சிதம்பரநாத குருக்களின் நூல் வெளியீடும், பாராட்டு விழாவும்!

இலங்கையிலேயே முதன்முதலாக சோதிடத்துறையில் 'கலாபூஷண' விருது பெற்ற திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சி.சிதம்பரக் குருக்களுக்கு தென்மராட்சி மக்கள் நடத்தும் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி.கந்தசாமி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், சிதம்பரக் குருக்களால் எழுதப் பெற்ற 'சோதிடங் கற்போம்' என்னும் நூலும் வெளியிடப்படும்.

அகில இலங்கை சைவக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், சைவப்புலவர் சி.கா.கமலநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி கௌரவிப்பர்.

தொடர்ந்து இடம்பெறும் 'சோதிடங் கற்போம்' என்னும் நூல் வெளியீட்டில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா நூல் அறிமுகவுரையும், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் வெளியீட்டுரையும், கலாநிதி க.வேதநாதன் நூல் ஆய்வுரையும் நிகழ்த்துவர். (24)

# குடாநாட்டின் அசாதாரண காலநிலையே வேப்பங் குருத்துக்கள் கருகக் காரணம்!

## விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக வேப்பமரங்களின் இலைகள் முழுவதும் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வேம்புகள் பட்டுப் போகும் நிலை ஏற்படுமோ என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போது இலை துளிர் காலமாகவுள்ளபோதும், பெரும்பாலான இடங்களில் வேப்பமரங்களின் குருத்துக்கள் முதலில் கருகுகின்றன.

இதனையடுத்து வேப்பமரங்களின் இலைகள் முழுவதும் கருகிக் காணப்படுகிறது. இலைகள் பழுத்து உதிர்வதுமில்லை.

இது தொடர்பாக விவசாயப் பணிப்பாளரிடம் நாம் தொடர்புகொண்டு கேட்டபோது - அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் நிலவிவந்த அசாதாரண காலநிலை காரணமாகவே இவ்வாறான நிலை ஒன்று தோன்றியுள்ளதாகவும், வேப்பமரத்தின் இலைகள் முழுவதும் கருகும் நிலை - வேப்பமரம் படுகின்றது என்ற நிலை அல்ல. அசாதாரண காலநிலைக்கு ஏற்ப மரங்கள் தமது இயல்பை மாற்றிக் கொள்வதாகத் தமக்கு தென்படுவதாகவும், இந்த விடயம் தொடர்பாகத் தாம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் வேப்பமரங்களின் தொகையில் பாதிப்பு ஏற்படுமென மக்கள் கவலை தெரிவித்தனர்.

# தடகளப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். மாவட்ட மெய்வல்லுனர் சங்கம் நடாத்தும் இரண்டு பிரிவுகளுக்கிடையிலான தடகளப் போட்டியின் முதலாவது பிரிவில் - 10,12,14 வயதுக்குட்பட்ட இருபாலருக்குமான தடகளப்போட்டி ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஆகும்.

இரண்டாவது பிரிவில் 16,18,20, 23 வயதுக்குட்பட்ட இருபாலருக்குமான தடகளப் போட்டி ஜூன் 30, ஜூலை 01 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான முடிவுத் திகதி அடுத்த மாதம் 20 ஆம்திகதி ஆகும் எனவும், போட்டிகள் யாவும் யாழ். பொது விளையாட்டரங்கில் நடைபெறும் என்றும் - இதன் விண்ணப்பப் படிவங்களை மெய்வல்லுனர் சங்கத்தின் செயலாளர் ரமணனிடம் அல்லது யாழ்.செயலக விளையாட்டுத்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (72)

# நியாப் II வேலைத் திட்டங்களை இவ்வாண்டுக்குள் முடிக்க நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் நியாப் திட்டம் II இன் கீழ் அபிவிருத்திக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட மையக்கிராமங்களில் புனரமைப்பு அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இதன் முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட மையக்கிராமங்களில் கிராமிய அபிவிருத்தித் திட்டம், கிராமிய விவசாயத் திட்டம், கிராமிய சமூக பொருளாதாரத் துறைகளை விருத்தி செய்யும் முகமாக தற்போது இவை தொடர்பான நிலைமைகளை மக்களின் ஒத்துழைப்புடன், பிரதேச மட்ட திணைக்களங்களைக் கொண்ட குழுவினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

எனினும் மேற்குறிப்பிட்ட நிலைமைகளை ஆராய்ந்து, அவை பற்றிய அறிக்கைகள் தயாரித்து முடிக்க கால அவகாசம் தேவைப்படுவதால், நியாப் திட்டத்தின் கீழ் சில வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பித்து இந்த ஆண்டுக்குள் அவற்றை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கிராமங்களில் உடனடியாக நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழுதடைந்த உணவுப்பொருட்கள் மக்கள் முன்னிலையில் அழிப்பு!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள கடைகள் மற்றும் உணவகங்களில் சுகாதார பகுதியினர் திடீரென மேற்கொண்ட நடவடிக்கையால், பாவனைக்குதவாத மற்றும் பழுதடைந்த உணவுப் பண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை தமிழீழ சுகாதாரப் பகுதியினரும், கொக்குவில் பகுதி சுகாதார பரிசோதகரும் இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பழுதடைந்த உணவுப்பொருட்கள் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து அழிக்கப்பட்டன.

இந்தப் பகுதிகளில் உள்ள கடைகளில் கடந்த நாட்களில் முறையான சுகாதார பராமரிப்புகள் மற்றும் சுகாதாரம் பேணப்படாமல் வந்ததுடன், பழுதடைந்த உணவுவகைகளையும் விற்பனை செய்துவந்துள்ளனர். சில தடவை சட்ட நடவடிக்கை மேற்கொண்டும் இவ்வாறான மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். (63)

# டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி நல்லூர் பிரதேசசபை சிரமதானப்பணி

(யாழ்ப்பாணம்)


டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினர் பல சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீர் தேங்கும் நிலைகள் மற்றும் வெள்ள வாய்க்கால்கள், வீதியோரபுறங்கள் என்பன சிரமதான அடிப்படையில் திருத்தப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றன.

கொக்குவில் அம்மன் வீதியில் உள்ள வெள்ள வாய்க்கால், திருநெல்வேலி பிள்ளையார் வீதியில் உள்ள வெள்ள வாய்க்கால், கோண்டாவில் வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள வெள்ள வாய்க்கால் என்பன நீரோட்டம் சீராக நடைபெறக்கூடியவாறு துப்புரவு செய்யப்படுவதுடன், வீதி ஓரங்களில் காணப்படும் கழிவுகள் அகற்றப்பட்டும் வருகின்றன.

நேற்றுமுன்தினம் கோண்டாவில் பகுதியில் நல்லூர் பிரதேச சபையினரால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (63)



றீடோவின் செயற்திட்ட நிகழ்வில் - தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ் உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும், றீடோவின் கிளிநொச்சி அலுவலக தலைவர் வி.கே.மாணிக்கம் மாணவர்களுக்கு குடை மற்றும் பாடசாலை புத்தகப் பைகளை வழங்குவதை மற்றைய படத்திலும் காணலாம். (44)

# சின்னஞ்சிறுசெய்திகள்

## கிரிக்கெட் விதிகள் தொடர்பான தேர்ச்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிரிக்கெட் விதிகள் தொடர்பான தேர்ச்சிப் பரீட்சையை யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தயாராகும் மீள்பார்வை வகுப்புகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். இந்துக் கல்லூரியில் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு கியூமெடிக்கா நிறுவனம் துவிச்சக்கர வண்டிகளை வழங்க முன்வந்துள்ளது.

முதல் தொகுதியாக எடுத்துவரப்பட்ட 125 துவிச்சக்கர வண்டிகள் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மேலும் இரு தொகுதிகளாக எடுத்துவரப்பட்ட 250 துவிச்சக்கர வண்டிகளும் - வெகுவிரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவிருப்பதாக கியூமெடிக்கா பிரதிநிதி தெரிவித்தார். (21)

## அபிஷேகம்

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள சாவகச்சேரி, மறவன்புலோ - வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் பிராயச்சித்த அபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது. பிராயச்சித்த அபிஷேகம் கைதடி யோ.குருசாமிக் குருக்களால் நடத்திவைக்கப்படும்.

ஆலயத்துக்கு செல்ல விரும்பும் அடியவர்கள் காலை 8.00 மணிக்கு முன் கோயிலாக்கண்டி சந்திக்கு வருகைதருமாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (24)

## விளையாட்டு போட்டி

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப்போட்டி இன்றும், நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. (72)

## அலங்கார உற்சவம்

மீசாலை கிழக்கு அருள்மிகு சித்திரவேலாயுதர் சுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் - இன்று காலை 11 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

காலையில் அபிஷேகமும், மாலையில் உற்சவமும் இடம்பெறும். விழாக் காலம் 10 நாட்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (24)

## சகல வர்த்தக நிலையங்களுக்கும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22, 23, 24 ஆகிய திகதிகளில் தொடர்ந்து வர்த்தக விடுமுறை வருவதால் பொதுமக்களின் நலன்கருதி 24.05.2005 செவ்வாய்க் கிழமை அன்று சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் யாழ் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

## வருமான வரி பரிசோதகர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு வருமான பரிசோதகர் மற்றும் மேற்பார்வையாளர் சங்கத்தின் வைகாசி மாதத்துக்கான கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்தக் கூட்டத்தில் எதிர்காலச் செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால், சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் பொ.கிருஸ்ணகுமார் கேட்டுள்ளார். (48)




# வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு உகந்த இரசாயனக்கலப்பற்ற உரக்கலவைகள்

வீட்டுத்தோட்டங்களில் பாதுகாப்பாக பயிர்களை மேற்கொள்ளும் போது - மண் அற்ற ஓரளவு எரிக்கப்பட்ட உமிகளைப் பயன்படுத்துவது மிகவும் உகந்ததாகும்.

காபனிக் உரத்தைப் பயன்படுத்தி, மரக்கறிப் பயிர்களை மேற்கொள்ள பல



பேர் விரும்பினாலும், வீடுகளில் பாது காப்பாகப் பயன்படுத்த இந்த எரிக்கப்பட்ட உமி சிறந்ததாகும்.

பாதுகாப்பான வீட்டு வளவுகளுக்குள் பல திட்டங்களைப் உபயோகித்து மரக் கறி வகைகளைப் பயிரிட முடியும்.

அதாவது - வீட்டு வளவுகளுக்குள் இருக்கும் நிலத்தில் பயிரிடுதல் சாக்கு அல்லது பொலித்தீன் பைகளில் பயி ரிடுவது போன்றவை இதில் முக்கியமான உற்பத்தி முறைகளாகும். வீடுகளில் வெற்று நிலத்தில் பயிர்ச் செய்கை மேற் கொள்ளும்போது, அதிகளவு செலவாவ தோடு சிறப்பான அறுவடை கிடைக்காத தாலும் செலவுக்கு ஏற்றவாறு இலாபம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக நீர் விநியோகம் மேற் கொள்வது சிரமமான காரியம். இதற்காக வாய்க்கால் அமைப்பது போன்ற திட்டங் களை மேற்கொண்டால் நிலத்தின் இடம் குறைந்து விடும். இதனை விடவும் வள வில் நிற்கும் மரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற மண்ணில் இருக்கும்



பீடைகள், பக்ரீறியா, புழுக்கள் மற்றும் களை களின் விதைகள் போன்றவையும் இருக் கும். இவை மரக்கறி பயிரிடும் போது பாதி ப்பை ஏற்படுத்தலாம். மிகமுக்கியமாக தக் காளி, கத்தரி போன்ற மரக்கறி வகை களைப் பயிரிடும்போது சிரமமாக இருக்கும்.

இந்தக் காரணங்களால் வீடுகளில் மரக் கறிப் பயிரை மேற்கொள்ளும் போது, கறுப்பு நிறமான பொலித்தீன் பைகளில் பாதி எரிக் கப்பட்ட உமி கலந்த மண்ணை நிரப்பிப் பயன்படுத்தலாம். கறுப்பு பொலித்தீன் பைகள் 12 அடி அகலமாகவும், 14 அடி உயர மாகவும் இருக்கவேண்டும். நிறமற்ற அல் லது பலவிதமான நிறம் கொண்ட பொலித் தீன்களை உபயோகித்தால், பங்கசின் பாதிப்பு ஏற்படலாம். சாக்கு அல்லது பொலித்தீன் பை களைப் பயன்படுத்தும்போது அவற்றின் அடிப்பாகத்தில் துவாரங்கள் இடவேண்டும். தற்போது பயிர்களை மேற்கொள்ளும்போது, தும்புகளை உபயோகிப்பது பிரபல்யமாக உள்ளது.

ஆனால், தும்புகளை உபயோகிக்கும் போது நட் டத்தை எதிர்நோக்க வேண் டிய சந்தர்ப்பங்களும் ஏற் படலாம். பைகளின் அடிப் பாகத்தில் தும்புகள் இறுகி விடுவதனால் நீர் வடிந்து செல்வது தடுக்கப்படும். இதனால் வேர்களுக்குக் கிடைக்கும் காற்று குறை வடைந்து, வேர்களின் வளர்ச்சி மட்டுப்படுத்தப் படும். அதே நேரம் ஈரத் தன்மை அதிகரிப்பதனால் தண்டு அழுகல், வேர் அழு கல் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். இதனை விட வும் தும்புகளுக்கு வெளிநாட் டுச் சந்தைவாய்ப்பு இருப்ப தால், நாளுக்கு நாள் அதன் விலை அதிகரித்து வருகிறது.

இந்தக் காரணங்களால் பாதிப்புகளைத் தடுத்துக் கொள்ள தும்புகளோடு ஓரளவு எரித்த உமி 1:1 என்ற விகிதத்தில் கலந்து உபயோகிக் கலாம். உமிப்பாவனை வர்த்தக ரீதியாக நோக்கும்போது மிகவும் இலாபகரமானது.

அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தங்களுடைய இடத்தில் நிறையும் உமி களை இதன் மூலம் நீக்க முடியும். சாதார ணமாக உமிகளை நீர் ஓடும் வாய்க்கால், குளங்கள், ஊரில் ஒதுக்குப்புறமான இடங் களிலேயே சேர்க்கப்படுகிறது. அல்லாவிடின் எரித்து விடவேண்டும். மேற்கூறிய இரு சந் தர்ப்பங்களில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற் படலாம். எனவே இதனைச் சிறப்பாக மரக் கறி பயிர்ச் செய்கை மேற்கொள்ளும்போது, உரமாக தும்போடு அல்லது தேயிலை தொழிற் சாலையிலிருந்து நீக்கப்படும் தேயிலை சக்கை யோடு கலந்து, மண் அற்ற உரமாக உப யோகிக்கலாம். தேயிலைச் சக்கைகள் மாத் திரம் உபயோகிக்கும்போது அதிகளவு நீர் பைகளில் தேங்கிவிடும். எனவே, பாதி எரித்த உமியை தேயிலைச் சக்கையோடு 1:1 என்ற விகிதத்தில் கலந்து உபயோகிக்கலாம்.

எவ்வாறாயினும் பாதி எரிக்கப்பட்ட உமி களை மாத்திரம் உபயோகிப்பது உகந்த தல்ல. காரணம் நீரை இழுத்துக் கொள்ளும் தன்மை உமிக்கு குறைவு. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்படி - பாதி எரிக்கப்பட்ட உமிக்கு நீர் விநியோகித்த போது எரிவடைந்த உமிகள் மாத்திரம் நீரை இழுத்துக் கொண்டதையும், எரியாத உமி களில் இந்தத் தன்மை இல்லாததையும் கண் டறியக்கூடியதாக இருந்தது. மேலும் இந்த வகை உமிகளில் நீர் இல்லாத காரணத்தால் நுண்ணங்கிகளின் வளர்ச்சி இன்மையும், பாதி எரிந்த உமிகளில் நுண்ணங்கி நாசினித் தன்மை இருப்பதாலும், மரக்கறிப் பயிர் களின் வேர்களுக்கு ஏற்படும் நுண்ணங்கி பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம். இதற்கு மேலதிகமாகப் பயிர்களின் வளர்ச் சிக்குத் தேவையான போசாக்குகளை இதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

வெவ்வேறு உரக் கலவையின் நீர் இழுத் துக் கொள்ளும் தன்மையும் Ph அளவுக ளும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள் ளன.

| இல | உரக் கலவை நீர் இழுத்துக் கொள்ளும் தன்மையின் சதவீதம் | Ph அளவு |
|---|---|---|
| 1. | பாதி எரிக்கப்பட்ட உமி | 14.8 - 6.4 |
| 2. | தும்பு | 95.2 - 6.3 |
| 3. | தும்புடன் பாதி எரிக்கப்பட்ட உமி | 71.2 - 6.8 |
| 4. | தூள் கற்கள் | 53.6 - 7.6 |
| 5. | தும்புடன் தூள் கற்கள் | 89.6 - 7.2 |
| 6. | பாதி எரிக்கப்பட்ட உமியோடு தூள் கற்கள் | 27.6 - 6.7 |
| 7. | பாதி எரிக்கப்பட்ட உமியோடு மணல் | 75.2 - 7.1 |
| 8. | மண் மணலோடு மாட்டெரு | 74.8 - 7.5 |

| பாதி எரிக்கப்பட்ட 100 கிராம் உமியில் அடங்கியுள்ள போஷாக்கின் அளவு | |
|---|---|
| சிலிக்கா | 51.55 |
| காபன் | - |
| பொட்டாசியம் ஒக்சைட் | 1.34 |
| அயன் ஒக்சைட் | 1.15 |
| மக்னீசியம் ஒக்சைட் | 0.20 |
| கல்சியம் ஒக்சைட் | 0.14 |
| மாங்கனிஸ் ஒக்சைட் | 0.10 |

**சசி சந்திரகாசன்**

# சின்ன வெங்காயப் பயிரில் இலை முறுகல் நோய்



யாழ்.குடாநாட்டில் ஆங்காங்கே வெங்காயப் பயிரில் இலை முறுகல் எனும் பங்கசு நோய் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட பயிரின் தாள்கள் தட்டையாகி, சுருண்டு மஞ்சள் நிறமாகும். ஈற்றில் பயிரின் குமிழ் அழுகி, பயிர் இறக்கும்.

இது காற்றிலுள்ள ஒரு வகைப் பங்கசால் உண்டாவ தால் ஈரலிப்பும், அதிக வெப் பமும் உள்ள காலங்களில் தொற்று அதிகரிக்கிறது. அத்து டன், தொற்றுள்ள விதை குமிழ்களை நடுகைக்குப் பாவிப்பதனாலும் நோய் பின் னர் பரவலாம்.

எனவே விதைக் குமிழ் களைக் கோமை என்னும் பங்கசு நாசினியால் தொற்று நீக்கி நடவும். அத்துடன் ரொப் சின் என்னும் பங்கசு நாசி னியை இருவாரத்துக்கு ஒரு முறை தோட்டத்தில் பயிருக்கு விசிறு வது அவசியமானதாகும்.

விதைக் குமிழ்களாகச் சேமிக்கும் பட்சத்தில் - சேமிப்பின்போது இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு அறுவடைக்கு இரு வாரங்களுக்கு முன் பயிர் தோட்டத்தில் இருக்கும்போது காபென்டைசிம் (வர்த்தகப் பெயர் - பவஸ்ரின்ர்) எனும் பங்கசு நாசி னியை விசிறுவது உத்தமம். மேற்படி மருந்துகளைத் தோட்டத்தில் விசிறும் போது, அவை மழை நீரால் கழுவுண்டு போகாது நிலைத்திருப்பதற்கு மருத்துடன் சேவெக்ரன்ற் எனும் ஒட்டியைக் கலந்து விசிறுவது விரும்பத்தக்கதாகும். மருந்துக் கொள்கலன்களில் குறிப்பிட்டுள்ளபடி மருந் துகளை நீருடன் கலந்து விசிறவும். மேலதிக ஆலோசனைக்குத் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரை நாடவும்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 50/= | 60/= | 50/= | 50/= | 35/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 30/= | 30/= | 30/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 70/= | 80/= | 90/= | 85/= | 85/= | 80/= |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 40/= | 40/= | 50/= | 30/= | 40/= |
| பாகற்காய் | 80/= | 70/= | 80/= | 100/= | 90/= | 65/= | 60/= |
| கரட் | 50/= | 60/= | 70/= | 40/= | 60/= | 70/= | 80/= |
| பீற்றூட் | 35/= | 20/= | 30/= | 50/= | 40/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 300/= | 300/= | - | 300/= | - | 170/= | 400/= |
| வெங்காயம் | 60/= | 40/= | 50/= | 60/= | 60/= | 60/= | - |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= |


# தொழில்மலர்



**பாதணி நுகர்வோர் தொகை சர்வதேச சந்தையில் உயர்ந்துள்ள இந்த வேளையில், அதன் உற்பத்தியை நவீன மயப்படுத்தி, கிராமிய மட்டத்திலுள்ள துறைசார்ந்த தொழில்வல்லுநர்களையும், இளைஞர்களையும் இணைத்து விரிவுபடுத்தி, பொருளாதாரத் துறையில் வளர்ச்சிகாண்பதே பாதணி உற்பத்திப் பயிற்சியின் நோக்கமாகும்.**

**இந்தப் பயிற்சியானது குடிசைக் கைத்தொழிலை மேலும் மேலும் வலுவுள்ளதாகவும், திறனுள்ளதாகவும் ஆக்குமேயன்றி அதனை ஒருபோதும் அழிக்காது.**

# பாதணி உற்பத்தியில் வதிரிக் கிராமத்துக்கு நீண்டகால வரலாறு உண்டு!!!



(சென்றவாரத் தொடர்ச்சி...)

பாதணி உற்பத்திப் பயிற்சியை மேற்கொண்ட பயிற்சியாளர்கள் சிலரிடம் இந்தப் பயிற்சிபற்றி அபிப்பிராயம் கேட்கப்பட்டபோது அவர்கள் வெளிப்படுத்திய கருத்துகளை இங்கு தருகிறோம்.

★ தங்கவேல் முகுந்தன் - வயது 32 - அல்வாய் தெற்கு அல்வாயில் வசிப்பவர்.

எனது தந்தையார், அவரின் தந்தையார் இந்தத் தொழிலைப் பரம்பரையாகச் செய்து வந்துள்ளனர். அதனால் எனக்கு இந்தத் தொழில்பற்றிய பயிற்சியும், அறிவும் ஓரளவுண்டு. இங்கு ஆரம்பிக்கப்பட்ட இருவாரப் பயிற்சியில் நான் நிறையக் கற்றுக்கொண்டேன். புதிய இயந்திரங்கள், அவைகளை இயக்கும் நுட்பங்கள்பற்றி அறியக்கூடியதாக இருந்தது. பெண்களுக்கான பாதணிகளை மட்டும் குடிசைத் தொழிலாக எமது பகுதி மக்கள் செய்து வருகின்றனர். ஆனால், இங்கு சப்பாத்துச் செய்வதற்கான பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் ஒருவர் நாளாந்தம் 600 - 800 ரூபாவரை வருமானமாகப் பெறமுடியும். இந்தப் பயிற்சி நிலையத்தைப் பாரிய உற்பத்தித் தொழிற்கூடாமாக மாற்றுவது எமது கடமையாகும்.

★ வல்லிபுரம் புவனேஸ்வரன் - வயது 46 - வதிரி, காந்திநிலையம் பகுதியில் வசிப்பவர்.

பாதணித்தொழில் எமக்குப் பரம்பரைத் தொழில். நான் கொழும்புபோன்ற இடங்களில் முன்னர் வேலை செய்திருக்கிறேன். இங்கு அளிக்கப்பட்ட பயிற்சி நவீனவிதமான பயிற்சி. இலகுவாகக் கற்கக்கூடியதாக இருந்தது. மனிதவலுவைக் கொண்டு கூடுதலாக இயந்திரங்களை இயக்கி, உற்பத்தியைக் கூட்டிப் பெறக்கூடிய வாய்ப்பாகக் காணப்படுகிறது. சப்பாத்துச் செய்வதில் தனியொருவர் 5 - 6 சோடி செய்யக்கூடிய வாய்ப்புண்டு. நாளாந்தம் 800 - 1000 ரூபா வரை வருமானமாகப் பெறமுடியும்.

மேலதிக பயிற்சிக்காகக் கொழும்பு செல்லவுள்ளோம். அங்கு பயிற்சியின்போது சகல வசதிகளும் எமக்கு அளிக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். பயிற்சியின்போது நாளாந்தம் உதவுதொகையாகக் குறைந்தது 200 ரூபாவரை வழங்கவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

★ ஐயம்பிள்ளை பிரபா - வயது 30 - சிறுப்பிட்டி தெற்கில் வசிப்பவர்.

எனது தொழில் விவசாயம். விவசாயத்தில் ஏற்படும் நோய்களின்தாக்கம், சந்தைப்படுத்தலில் ஏற்படும் போட்டி, முதலீடு பற்றாக்குறை இவைகள் காரணமாக விவசாயத்தில் எனக்கு நட்டமே ஏற்படுகிறது. இப்படி ஒரு பயிற்சி நடைபெறுவதாகத் தங்கள் பத்திரிகைவாயிலாக அறிந்து நானும் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டேன்.

சப்பாத்துச் செய்வதில் நவீன நுட்பங்கள் எமக்குக் காட்டித்தரப்பட்டன. அவை இலகுவானதாகவும், விரைவாகக் கற்கக்கூடியதாகவும் இருந்தன. இயந்திரங்களை முறையாக இயக்குவதனூடாக உடல் வருத்தம் மிகவும் குறைவு. இந்தத் தொழில் நல்ல வருமானத்தை அளிக்குமென நம்புகிறேன். இரண்டுவாரப் பயிற்சியில் என்னால் தனித்துச் சப்பாத்து செய்யக்கூடிய தகுதி பெற்றிருக்கிறேன். இதன் நுட்பங்கள் நிறையவுண்டு. மேற்பயிற்சிக்காக கொழும்புக்குச் செல்லும்போது அங்கு நிறையக் கற்றுக்கொள்ள முடியுமென நினைக்கிறேன். பயிற்சிக்காலத்தில் உதவுதொகை வழங்கப்படின் எமக்கு அது பேருதவியாக இருக்கும்.

★ கமலதாசன் இராணி - வயது 29 - வதிரி கரவெட்டியைச் சேர்ந்தவர்.

நான் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம் பெண்களுக்காய் வழாங்கிய பயிற்சிநெறியில் பருத்தித்துறை பிரதேசத்தில் (Hand Bag) கைப்பை செய்யும் பயிற்சியில் பெற்ற அனுபவம் உண்டு. இங்கு எமக்கு வழங்கப்பட்ட பயிற்சியில் பல தொழில்நுட்பங்கள், நவீன முறைகள் பல சொல்லித்தரப்பட்டன.

இயந்திரங்கள் நவீனமானவை. அதனை இயக்குவதற் குப் போதிய பயிற்சி தேவைப்படுகிறது. புதிய, புதிய வடிவங்களை நாம் காணக்கூடியதாக இருந்தது. பயிற்சி இலகுவாகவும், எமது திறமைகளை மேலும் வளர்க்கக் கூடியதாகவும் இருந்தது.

மூன்றுமாதப் பயிற்சி கொழும்பில் வழங்கப்படும்போது நிறையக் கற்றுக்கொள்ளுவோம். இளைஞர் - யுவதிகள் இந்தப் பயிற்சியை உரிய முறையில் பயன்படுத்த வேண்டுமென்பதே எனது ஆசை. (முற்றும்)

**நேர்காணல்
எஸ்.ஜே.என்.**

# உங்கள் வியாபாரத்தை முன்னேற்ற ஒரு அரிய சந்தர்ப்பம்

BDC network

வியாபார அபிவிருத்தி நிலைய வலையமைப்பானது - சிறிய நடுத்தர வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன், அதற்கான சேவைகளை வழங்கும் அபிவிருத்திசேவை வழங்குநர்களின் வாய்ப்பைக் கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

இந்த அமைப்பானது - ஆசிய அபிவிருத்தி வங்கியினதும், இலங்கை அரசாங்கத்தினதும் இணைந்த செயற்திட்டமாகும்.

இந்த நிறுவனமானது - நாடளாவிய ரீதியில் ஆறு வியாபார நிலையங்களைக் கொண்டுள்ளது. இந்த வலையமைப்பை ஒன்றிணைந்து நடத்துபவர்களும், உரிமையாளர்களுமாக மூன்று தனியார் வியாபார அபிவிருத்தி நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. அவையாவன -

1. இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம் (SLBDC)
2. சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்தி சேவைகள் நிறுவனம் (SEEDS)
3. கைத்தொழில் சேவைகள் பணியகம் (ISB)

எனவே சிறிய நடுத்தர வியாபார முயற்சியாளர்கள் (SMES), வியாபார அபிவிருத்திசேவை ஊக்குவிப்பாளர்கள், வியாபார அபிவிருத்திசேவை வழங்குநர்கள் ஆகியோர் தமது நிறுவனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, இந்த அமைப்புடன் தொடர்புகொண்டு, வியாபார அபிவிருத்தி சேவைகளைப் பெறமுடியும்.

மேலும் இந்த அமைப்பானது, வியாபார சேவைகள், உதவி, வசதிகள் வழங்கும் நிறுவனம், வழங்கும் பண உதவிகள், நிபுணத்துவ சேவைகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்கவும் முன்வந்துள்ளது.

பின்வரும் செயற்திட்டங்களுக்கு வியாபார சேவைகள், உதவி, வசதிகள் வழங்கும் நிறுவனம் (BSSF) பண உதவிகளை அளிக்கும்.

### வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குநர்களுக்கானது...

❖ தேவைகள் மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சிகளை வழங்குதல்.

❖ வியாபார சேவைகள் பயிற்றுவிப்போருக்கான பயிற்சிகள் வழங்கல்.

❖ புதியசேவை உற்பத்திகளுக்கான ஆய்வுகளும், அபிவிருத்திகளும்.

❖ வியாபார அபிவிருத்திசேவைகள் தொடர்பான தேவைகளை மதிப்பீடு செய்தல்.

❖ வியாபார அபிவிருத்தி சேவைகள் தொடர்பான சந்தைப்படுத்தலுக்கான திட்டங்களைத் தயாரித்தல்.

❖ வியாபார அபிவிருத்திசேவைகள் தொடர்பான சந்தைப்படுத்தல் (ஊக்குவிப்பு) நடவடிக்கைகள்.

❖ வியாபார அபிவிருத்தி தொடர்பான சேவைகளுக்குத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்.


❖ சிறிய நடுத்தர வியாபார முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளைத் திட்டமிடலும், நெறியாள்கை செய்தலும்.

❖ கைத்தொழில் சார்பான முதலீடுகளை ஊக்குவித்தல்.

(தொடரும்...)

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவ புலம்பெயர்மக்கள் முன்வரவேண்டும்

## தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்



(வடமராட்சி)

கடந்த இருபது வருடகால போர் நடவடிக்கைகளால் உயிரிழப்பு, சொத்திழப்பு, வாழ்விடஇழப்பு என இன்னும் பல்வேறு இன்னல்களையும், பேரழிவுகளையும் வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் சந்தித்துள்ளனர் என தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

தாளையடி கடற்கரை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற படகுகள் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் மீண்டும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பி வாழத்தொடங்கிய இந்தப் பிரதேச மக்களை- சுனாமி அனர்த்தம் மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கியது. இதன் மூலம் உயிரிழப்பு, பொருள் இழப்புகளைச் சந்தித்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைத்து, மீண்டும் கடலுக்குச் சென்று தொழிலை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் இந்தவேளையில் ஜேர்மன் வர்த்தகப் பிரமுகர் சலமனுக்கு தமிழீழ தேசியத் தலைவர் மற்றும் மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பிரதேசத்துக்கு சுமார் 1500 படகுத் தொகுதிகள் வரை தேவையாகவுள்ளது. அதில் 145 வரையான படகுத் தொகுதிகளே இதுவரை வழங்கப்பட்டுள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்கள் இதுவரை 900 படகுகள்வரை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ள போதும், மிகக் குறைந்த வேகத்தி லேயே படகுத் தொகுதிகள் வழங்கப்படுகின்றன. வழங்கும் வேகம் அதிகரிக்கப்பட வேண்டும்.

எமது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய சலமன் போன்ற வெளிநாட்டவர்கள் முன்வரவேண்டும். அதன்மூலம் மக்களின் படகுத் தொகுதிகளின் தேவைகளை விரைவாகப் பூர்த்திசெய்ய முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஜேர்மன் வர்த்தகப் பிரமுகர் சலமன், ஜேர்மன்நாட்டு மேயர் (நகராதிபதி) லம்பேட், ஜேர்மன் பிரஜை பிராங், ஏ.எஸ்.பி நிறுவனத்தைச் சேர்ந்த ஆன், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மேலாளர் த.குகன், கடற்தொழிலாளர் பரிசோதகர் ந.கணேசமூர்த்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் றஞ்சன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன், கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், ஜேர்மன் வர்த்தகப் பிரமுகர் சலமன், ஜேர்மன்நாட்டு மேஜர் லம்பேட், தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை சமாச பொதுமுகாமையாளர் த.பாலசிங்கம் நிகழ்த்தினார்.

முதலாவது படகை ஜேர்மன் நாட்டு வர்த்தகப் பிரமுகர் சலமன் பயனாளியிடம் கையளித்தார். தொடர்ந்து மிகுதி 14 படகுகளையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள், தமிழீழ பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வழங்கினர்.

ஜேர்மன் வர்த்தகப் பிரமுகர் சலமன் தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தின் ஊடாக 15 படகுத் தொகுதிகள், ஒரு படகு வெளியிணைப்பு இயந்திரம், வலைகள் போன்ற கடற்தொழில் உபகரணங்கள் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினூடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே -19

1498 : நான்கு கப்பல்களுடன் 170 மாலுமிகளுடனும் லிஸ்பனில் இருந்து புறப்பட்ட போர்த்துக்கேய கடலோடியான வாஸ்கொடகம இந்தியாவின் கள்ளிக்கோட்டைக் கரையை அடைந்தார்.

1657 : சொத்துக்கள் விற்பனை, வாடகை, கப்பல் போக்குவரத்து என்றவாறு வகைப்படுத்தப்பட்டு வரிவிளம்பரங்கள் முதன் முதலாக "பப்ளிக் அட்வைசர்" என்ற பத்திரிகையில் வெளிவர ஆரம்பித்தது.

1912 : ஆகாய விமானங்களுக்கு பதிவு இலக்கம் கொடுக்கும் முறை சர்வதேச விமானவியல் அமைப்பால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

1914 : பால்கன் லீக் உடன்படிக்கையின் விளைவாக அல்போனியாவில் பெருங்கலவரம் மூண்டது.

1917 : ஜேர்மனியுடனான இராஜதந்திர உறவை நிக்கரகுவா முறித்துக் கொண்டது.

* இராணுவத்தில் மூத்த அதிகாரிகள் எவருக்கும் பதவி ஓய்வு இல்லை. இராணுவத்திலிருந்து ஓடிப்போன வீரர்கள் மீண்டும் வந்து இணையாவிட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் உத்தர விட்டார்.

1918 : லண்டன் நகர் மீது மிகப்பெரிய அளவில் ஜேர்மனி விமானத் தாக்குதலை நடத்தியது. ஒரு மணி நேரத் தாக்குதலில் மட்டும் 14 தொன் குண்டுகள் வீசப்பட்டன. ஜேர்மனியின் 11 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

1919 : ஈஸ்டோனியா சுதந்திரக் குடியரசாகியதாக அறிவித்தது.

1920 : பிரிட்டன், 370,000 போர்க் கைதிகளை விடுவித்தது.

* பெர்ஷியா மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை சோவியத் ரஷ்யா ஆரம்பித்தது.

1934 : பல்கேரியாவில் இரணுவப்புரட்சி ஏற்பட்டது.

1939 : பிரான்சுக்கும், போலந்துக்கும் இடையில் இராணுவ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1940: ஜேர்மனியின் அதிவேகத் தாக்குதலால் நிலை தடுமாறிய பிரான்ஸியப் படையின் தளபதிகளில் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். ஒருவருக்கு சித்தபிரமை ஏற்பட்டது. ஒருவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். தலைமைத் தளபதி கேமலின் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

1942 : காந்தப் புலத்தில் அணுவினுள் சுற்றுவட்டப் பாதையில் வரும் எலக்ட்ரோனிக் இயக்கத்தில் தள்ளாட்டம் இருக்கும் என முதன் முதலில் ஊகித்துக் கூறிய அயர்லாந்தின் புகழ்பெற்ற விஞ்ஞானி சேர் ஜோசப் வார்மோர் மரணமடைந்தார்.

1945 : கடுமையான போருக்கு பின் சீனா ஃபூசென் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது.

1958 : கொலரோடோ ஸ்பிரிங்கைத் தலைமையகமாகக் கொண்டு வட அமெரிக்க கூட்டு விமானப் பாதுகாப்பு ஆணையகம் ஆரம்பிக்கப்பட்டது.

1971 : செவ்வாய்க்கிரகத்தை ஆராய்வதற்காக ரஷ்யாவால் மார்ஸ் - 2 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. செவ்வாயின் தரைப்பரப்பில் ஒரு ஊர்தியை இறக்கும் முயற்சி தோல்வி அடைந்தது.

1973 : பொருளாதாரம், தொழில், தொழில்நுட்பத்துறைகளில் ஒத்துழைப்புப் பற்றிய 10 வருட ஒப்பந்தத்தில் சோவியத் அதிபர் பிரஸ்னேவ்வும், ஜேர்மனிய அதிபர் பிராண்ட்டும் பான் நகரில் வைத்துக் கையெழுத்திட்டனர்.

1987 : அரச ஆதரவுடன் ரஷ்யாவில் முதலாவது பூனைக் கண்காட்சி நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பூனைகள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றின.

தொகுப்பு - சந்துரு

# சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா சிறார்களின் விளையாட்டு விழா

தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையின் கீழ் சிறுவர் கல்வியூட்டல் மேம்பாட்டுப் பணிக்கமைய ஊரக வளர்ச்சிப் பணியினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் இரணைமாநகர், முழங்காவில் பிரதேசத்தில் சொக்கலிங்கம் சிறுவர்பூங்கா சிறார்களின் விளையாட்டு விழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு சிறுவர்பூங்கா நிர்வாகி நிலாமதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி, தேசியக்கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, சிறுவர் கல்வியூட்டல் மேம்பாட்டுக் கொடி, முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடி என்பன ஏற்றப்பட்டன.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை முன்பள்ளி ஆசிரியர் அமலரஞ்சி நிகழ்த்தினார். ஆசியுரையை தமிழீழ அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் வழங்கினார்.

இதனையடுத்து தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் பூங்காச் சிறார்களால் இசைக்கப்பட, விளையாட்டுச் சுடர் ஏற்றப்பட்டு சத்தியப் பிரமாணம் நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து நிகழ்ச்சி நிரல்களுக்கமைய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

விளையாட்டு நிகழ்வை இரணைமாநகர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஆரம்பித்து வைத்தார். இந்தப் பூங்கா சிறார்களது பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகள்- பார்வையாளர்களையும், சிறார்களது பெற்றோர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு நிகழ்வுகள் நிறைவு பெற்றதையடுத்து சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த விளையாட்டு நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன், ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கந்தன், மதகுருமார்கள், ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், முழங்காவில் பிரதேசப் பொறுப்பாளர் தமிழன்பன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஜெயராணி, பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# மீன்பிடித்துறை வளாகம் அமைக்க மன்னாரில் காணி ஒதுக்கப்பட்டுள்ளது

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித்துறை வளாகத்தை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக வங்காலையில் 75 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இங்கு யாழ். பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு ஒன்று சென்று இதற்கான திட்டத்தைத் துரிதப் படுத்தி வருகிறது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் இவர்களுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# ஆளணிப் பற்றாக்குறையுடன் நிலவும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை!

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை ஊழியர் முதல் நோயாளர்வரை பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என, கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சதானந்தன் தெரிவித்தார்.

வைத்தியசாலை நிலை குறித்து வினாவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் நோயாளர்கள், வெளிநோயாளர் பகுதிக்கு வெளியே கொளுத்தும் வெயிலிலும் காத்துநிற்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்த வைத்தியசாலையில் கடந்த சில வாரங்களாகத் தினமும் 860 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்பது வைத்தியசாலைக் குறிப்பேட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் 40 வைத்தியர்களும், 70 இற்கும் மேற்பட்ட தாதியர்களும், 12 மருத்துவ மாதர்களும் கடமை புரிய வேண்டிய நிலையில்- தற்போது 7 மருத்துவர்களும், 3 மருத்துவ நிபுணர்களும், 15 தாதியர்களுமே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதே போன்று மற்றும் சகல தர ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் மட்டுமன்றி வைத்திய ஊழியர்களும் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*
*திருக்குறள்*

# நமது நோக்கு

## யார் குற்றம்?

அகதிவாழ்வுக்கு முடிவு தேடி - தாயகம் திரும்பிக் கொண்டிருந்த ஏழுக்கும் குறையாத தமிழ் மக்கள் கடலுக்கு இரையாகியிருக்கின்ற சம்பவம்,மீண்டும் எமது நெஞ்சங்களை நெகிழ வைப்பதாக அமைந்துள்ளது.

போர்க்காலத்தில் இடம்பெயர்வும், அவல வாழ்வும் தமிழ் மக்களை தமிழ் நாடு நோக்கி புலம் பெயர வைத்தது.

பல்வேறு ஆபத்துக்களுக்கு மத்தியில் கடற்படையினரின் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் அகதிகள் தமிழகத்தை தஞ்சமென நம்பி ஓடினர்.

ஆனால், அவர்கள் அங்கு அகதி முகாம்களில் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் அவலங்களைச் சந் தித்து வருகின்றனர். ஏதோ யுத்தத்தின் கொடூரத்தில் இருந்து தப்பிவிடலாம் என்ற நப்பாசையில் தமிழகத்தை தஞ்சம் என நம்பிய அகதிகளுக்கு - தாயகம் திரும்ப வேண்டும் என்ற அவா ஏற்பட்டுள்ளது.

தஞ்சமடைந்த இடத்திலும் கூட நிம்மதியாக வாழமுடியாத நிலையில் தான் அகதி வாழ்வுக்கு முடிவு கண்டுவிடுவோம் என்ற நோக்கில் படகு மூலம் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் அகதிகள் நாடுதிரும்புகின்றனர்.

இவர்கள் அகதிமுகாம்களில் இருந்து இரகசியமாக தப்பி கடற்கரைக்கு வந்து ஆயிரக்கணக்கான ரூபா பணத்தைக் கொடுத்துத்தான் படகேறுகின்றனர்.

தாம் சேர்த்து வைத்த கொஞ்ச சொத்துக்களை விற்று எப்படியாவது சொந்த இடத்திற்கு சென்று சேர்ந்து விடவேண்டும் என்ற ஒரேநோக்கோடு இவர்கள் படகு மூலம் தாயகம் திரும்ப முற்படுகின்றனர்.

ஆனால், வழியில் இவர்களை படகோட்டிகள் ஏமாற்றி கடலுக்கு நடுவில் மணற்திட்டிகளில் இறக்கி விட்டுச் செல்வதும், படகு கவிழ்ந்து உயிரிழப்புகளை சந்திப்பதும் இப்போது வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன.

மன்னார் கடலில் அடிக்கடி இடம்பெற்று வரும் விபத்துக்களுக்கும் அதனால் ஏற்படும் மரணங்களுக்கும் தமிழக மீனவர்களை குற்றம் கூறிப் பயனில்லை.

இனிமேலும் அகதிகளாக தமிழகத்தில் வாழமுடியாது என்ற நிலைக்கு அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் மக்கள் வந்துவிட்டனர். இவர்கள் உடனடியாகவே தாயகம் திரும்ப தயாராக இருக்கின்றனர்.

ஆனால், இவர்களைப் பாதுகாப்பாக இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கு இலங்கை - இந்திய அரசுகள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருக்கின்றன.இதன் காரணமாகவே பல ஈழத்தமிழ் அகதிகள் கடலுக்கு இரையாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய அரசுகளும் யு.என்.எச்.சி.ஆரும் இணைந்து அகதிகளை தாயகம் அழைத்துவருவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

இந்த நடவடிக்கை தாமதமடைவதால்தான் படகுகள் மூலம் இந்திய - இலங்கை கடற்படைகளுக்கு பயந்து பயந்து நாடுதிரும்ப முற்படுகின்றனர்.

இவர்கள் ஆங்காங்கே எதிர்பாராத விதமாக படகு விபத்துக்களில் சிக்கி மரணத்தை சந்திக்க நேரிடுகின்றது.

இப்படிப்பட்ட நிலைக்கு தாயகம் திரும்பும் அகதிகளையோ, தமிழக மீனவர்களையோ குற்றம் கூறிக் கொண்டிருக்க முடியாது.

இனிமேலும் அகதிகளாக வாழமுடியாது என்ற கட்டத்தில் தான் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் மக்கள் நாடுதிரும்புகின்றனர். அப்படி நாடுதிரும்புவோருக்கு பாதுகாப்பான வசதிகளை செய்துகொடுக்காதிருப்பது யார் குற்றம்?

யு.என்.எச்.சி.ஆர் விமானம் மூலம் மாதத்தில் ஓரிரு தடவைகள் மட்டும் குறிப்பிட்டசில அகதிகளை ஏற்றிவருகிறது. இப்படி விமானத்தில் முழுஅகதிகளையும் கொண்டுவந்து சேர்ப்பதற்கிடையில் ஒரு தலைமுறை இடைவெளி ஏற்பட்டு விடும்.

எனவே, தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளை பாதுகாப்பாக கொண்டுவந்து சேர்க்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டியதே இன்றைய முக்கிய தேவையாகும்.இதை இலங்கை - இந்திய அரசுகள் மற்றும் ஐ.நாசபை என்பன கவனத்தில் எடுக்குமா?

# நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்....

# பேச்சில் தெரிந்த துணிவு செயலிலும் தெரியுமா?

சந்திரிகா அம்மையாரின் துணிச்சல் மிகுந்த பேச்சின் மீது நேற்று எனக்கிருந்த நம்பிக்கை இன்று கொஞ்சம் குறைந்திருக்கிறது. நாளை எப்படி இருக்குமோ தெரியாது. அம்மையாரின் பேச்சிலிருந்த துணிச்சல் செயலிலும் இருக்கவேண் ும். அப்போதுதான் என்னைப்போல் இன்னும் பலரும் நம்பிக்கை வைப்பார்கள் என்றபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

கண்டியில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் பலரும் அம்மையாரைப் பாராட்டியிருக்கிறார்கள். தொடர்ந்து செயற்படுங்கள் நாங்கள் உதவிக்கு வரக் காத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையில் சந்திரிகா அம்மையார் இதில் பின்வாங்குவதற்கான சாத்தியம் மிகக்குறைவு என்றேன்.

அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஜே.வி.பியிலும்கூட சிறிது மாற்றம் இருப்பதாகத் தெரிகிறது. பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் மக்களால் தெரிவுசெய்யப்படாத விடுதலைப்புலிகள் கையெழுத்திடுவதைத்தான் ஜே.வி.பி எதிர்ப்பதாகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைச்சாத்திடுவதை எதிர்க்கப்போவதில்லை என்றும் ஜே.வி.பியினர் தெரிவித்திருக்கிறார்களாம்.

இதுமட்டுமல்ல சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவு ஏற்படுத்திய சவால்களை சர்வதேச சமூகம் மற்றும் உலக வங்கி போன்றவற்றின் ஆதரவுடன்தான் எதிர்த்துச் சமாளிக்க முடியுமேதவிர தனித்துநின்று சாதிக்கமுடியாது. இப்படி ஜே.வி.பியின் மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்திருப்பதாக பத்திரிகையொன்று செய்திவெளியிட்டிருக்கிறது.

கடற்தொழில் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்காவே இப்படித் தெரிவித்திருக்கிறார். அடுத்து வரவிருக்கும் பருவப் பெயர்ச்சி மழையால் கரையோரப் பகுதிகளுக்கு மேலும் சேதம் ஏற்படக்கூடும் என்றும், இதனால் நாங்கள் முன்னதாகவே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் சொல்லியிருக்கிறார். புனர்வாழ்வு, புனரமைப்புக்காக மீன்பிடி அமைச்சுக்கு ஐநூறு மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுமென்றும் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்கா சொல்லியிருப்பதைப் பார்த்தீரா என்றார் பரமசிவம். தொடர்ந்து இதிலிருந்து என்ன தெரிகிறது என்று கேட்டார்.

உதவி வழங்கும் நாடுகள் பொதுக்கட்டமைப்பை நிபந்தனையாக வைத்து இலங்கைக்கு வழங்கவிருக்கும் நிதியில் தமக்கும் அதாவது தமது அமைச்சுக்கும் வேண்டுமென்று தூண்டில் போடுகிறார் என்று அர்த்தம் என்றேன்.

பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்று சும்மாவா சொன்னார்கள். விடுதலைப்புலிகளுக்கு அதாவது, தமிழ் மக்களுக்கு வெளிநாடுகள் இரங்கிக் கொடுக்கும் பணத்தில் எதுவும் போய்விடக்கூடாது என்பதுதான் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற இனவாதிகளின் நிலை.

ஆனால், பொதுக்கட்டமைப்புக்குத்தான் உங்கள் நிதிபோகுமென்றால் எங்களுக்கு நிதியுதவியே தேவையில்லை என்று சொல்லும் நிலையிலா அவர்கள் இருக்கிறார்கள்? நாடும் இருக்கிறது. விடுதலைப்புலிகளுடன் ஒத்துழைத்து நாட்டை முன்னேற்றப் பாருங்கள் என்று தானே வெளிநாடுகள் சொல்லிக்கொண்டிருக்கின்றன என்றார் பரமசிவம்.

வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் எதுவும் செய்யமுடியாது என்பது சந்திரிகா அம்மையாருக்குத் தெரியும். விடுதலைப்புலிகளின் ஆதரவில்லாமல் இந்த வெளிநாட்டு உதவிகள் கிடைக்கமுடியாதென்பதையும் அவர் அறிவார். ஜே.வி.பி பிரதிநிதிகளும், அமைச்சர் டக்ளஸ் போன்றவர்களும் கண்டி மாநாட்டில் அமர்ந்திருந்த போதுதான் விடுதலைப்புலிகள் பற்றிப் பாராட்டும் தெரிவித்து அம்மையார் பேசியிருந்தார். இனியும் பொதுக் கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால் நாங்கள் வெளியேறி விடுவோம் என்று ஜே.வி.பியினர் மிரட்டுவார்களா? என்றேன்.

இனி இந்தமாதிரி மிரட்டல்கள் இல்லாவிட்டாலும் வேறு வழிகளில் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்கள். திருகோணமலையில் திடீரென்று நகரசபைக் காணியில் புத்தர் சிலை முளைத்து குழ்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

புலிகள் தூண்டிவிட்டுத்தான் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. சந்திவெளி சம்பவமானாலும் வேறு எந்த ஆர்ப்பாட்டத்தை பொதுமக்கள் நடத்தினாலும் அது புலிகள் தூண்டிவிட்டதென்றே கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிடும்.

அகிம்சா மூர்த்தி புத்தரின் சிலையைச் சந்தியில் வைத்து ஒருவரின் உயிர் பலியெடுக்கப்பட்டிருக்கிறது. புத்தர் வெளியே அமர்ந்திருக்க மக்கள் வீடுகளுக்குள் இருக்க வேண்டுமென்று திருமலையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

புத்தர் சிலையை இரவோடிரவாக வைப்பதும், திடீரென்று சந்தியில் இராணுவ முகாம் முளைப்பதும் தவறில்லை. இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் புலிகளின் தூண்டுதலாலேயே செய்கிறார்கள் என்று பழியைப் போடுவது தான் நியாயமா!

சில வருடங்களுக்கு முன் லெகொக் பாதிரியாரின் சிலை வைப்பதற்கு கொழும்பு மருதானை மக்கலம் வீதி சந்தியில் பீடம் அமைத்தார்கள். திடீரென்று இரவோடு இரவாக ஒரு புத்தரைக் கொண்டுவந்து அந்தப் பீடத்தில் வைத்தார்கள். பின்னர் வருடக் கணக்காக அதற்கு பொலிஸ், இராணுவம் காவல் காத்தது. இப்பொழுது அவர் நிரந்தரமாகவே அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டார்! திருமலையில் எப்படியும் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது ஜே.வி.பி மற்றும் அதைப்போன்றவைகளின் திட்டம்.

திருமலை துறைமுகம் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகும், திருமலை நகரம் பறிபோகும்; இதனால் இந்தியாவுக்கும் ஆபத்து என்று கதிர்காமர் டெல்கி சென்றதெல்லாம் சும்மாவா? இப்போது புத்தரின் திடீர் அவதாரம் இத்திட்டத்தின் ஒரு அம்சமே. குழப்பத்தை ஏற்படுத்தவேண்டும், இந்தியாவை இழுத்துவிடவேண்டும் என்பதே ஜே.வி.பியின் திட்டம் என்றார் பரமசிவம்.

ஜே.வி.பியின் பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு செயற்பாடுகளின் பின்னணியில் இந்திய புலனாய்வுப் பிரிவான றோ இருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரியொன்றின்பத்தி எழுத்தாளர் எழுதுகின்றார். பிராந்திய வல்லரசாகத் தன்னை நிலைநாட்டுவதற்காக ஸ்திரமற்ற பிளவுபட்ட நாடாக இலங்கை இருப்பதையே இந்தியா விரும்புகிறதென்று கொத்தமல்லி என்ற புனை பெயரில் பொடி அக்காவுக்கு எழுதும் கடிதத்தில் அந்த எழுத்தாளர் குறிப்பிட்டிருந்தார் என்றேன்.

கொழும்பு ஊடகவியலாளர்களுக்கும் விஷயம் விளங்குதுதான் என்று சொல்லி நகர்ந்தார் பரமசிவம்.

செய்திக் கட்டுரை

கண்ணன்

# விளையாட்டுதுறையில் பின்தள்ளப்படும் நெடுந்தீவுப் பாடசாலை மாணவர்கள்


நெடுந்தீவுப் பிரசேதத்தின் அமைவிடம் யாழ். குடாநாட்டில் இருந்து மிகவும் தொலைதூரத்தில் இருப்பதாலும், பெரும் கடல் தாண்டிப் பயணிக்க வேண்டும் என்பதாலும் - அரச நியமனம் பெறுவோர் பலர் வெளியிடங்களில் இருந்து இங்கு வருவதில்லை.

இதேபோன்று இங்கு செய்யப்படும் நியமனங்களும் திருப்திகரமானதாக அமைவதும் இல்லை. இந்த வகையிலே தற்போது நெடுந்தீவில் எட்டுப் பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 3 உயர்தரப் பாடசாலைகளும் உள்ளன.

மாணவர்களிடையே ஒற்றுமையும், போட்டி மனப்பாங்கையும், மன உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தும் விளையாட்டு நிகழ்வுகள் - வருடத்தில் முதல் தவணைக்குள் நடத்தி முடிக்கப்படுகிறது.

இந்த வகையில் நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகளும் தங்களால் இயலுமான வரையில் சிறப்பாகத் தங்கள் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளை





நடத்தி முடித்துவிட்டன.

இத்தனைக்கும் நெடுந்தீவில் உள்ள ஒரு பாடசாலைக்குக் கூட விளையாட்டுத் துறைசார் ஆசிரியர்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக நியமிக்கப்படவில்லை. அவ்வாறு உரியவர் இன்றி இன்றுவரைக்கும் நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகள் - விளையாட்டு நிகழ்வுகளை நடத்தி முடித்துவிட்டன.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள எட்டுப் பாடசாலைகளையும் சேர்த்து நெடுந்தீவு ஒரு தனிக் கல்விக் கோட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலே, கோட்டத்துக்கு ஒன்றாவது ஒரு விளையாட்டுத் துறை சார்ந்த ஆசிரியரை உரியவர்கள் நியமித்தால், பெரும்பாலான திறமையான மாணவர்கள் முன்னுக்கு வரமுடியும்.

தற்போது வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் விளையாட்டுத் துறைப் பட்டம் பெற்ற பட்டதாரிகளையும் நியமித்திருந்தால், இவ்வாறு நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதுடன், வளமானவர்களை வைத்து உரிய வழி இன்றிக் கஷ்டப்படும் நெடுந்தீவுப் பிரதேசம் போன்ற கஷ்டப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களது திறமைகளையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

இந்த வருடம் நெடுந்தீவில் உள்ள சகல பாடசலைகளும் அதாவது - ஆரம்பப் பிரிவு மற்றும் உயர்தரப் பிரிவு பாடசாலைகள் அனைத்தும் தங்கள் பாடசாலைகளில் உள்ள விளையாட்டுத் துறையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களைக் கொண்டு, மெய்வல்லுனர் நிகழ்வுகளை கோலாகலமாக நடத்தி முடித்துள்ளனர்.

இதிலே தடகள விளையாட்டுக்களுடன், குழுப்போட்டிகளும் நடத்தப்பட்டுள்ளன. புதிது புதிதாக விதிகள் கொண்டு வரப்படுவதுடன், விளையாட்டுக்களும் பாடசாலை மாணவர்கள் இடையில் புதிதாகப் புகுத்தப்படுகிறது.

இவ்வாறு விளையாட்டுக்கள் தொடர்பான விதிகள் மற்றும் நுணுக்கங்களை விளையாட்டுத்துறை சாராதவர்கள் அறிந்திருக்க நியாயமும் இல்லை. இந்த வகையில், பாடசாலைகள் மட்டத்தில் விளையாட்டுத்துறைகளுக்குப் பொறுப்பாக தற்போதுள்ள ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, பயிற்சி வகுப்புகளைக் கூட நடத்தலாம்.

கல்வி வலயங்களில் ஒவ்வொரு பாடங்களுக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் விளையாட்டுக்கும் நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறு தீவக வலயத்தில் நியமிக்கப்பட்ட துறைசார்ந்தவர்கள் நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகளுக்கு வந்து செல்வதாகவோ, பயிற்சிநெறிகளை வழங்குவதாகவோ தெரியவில்லை.

இதேவேளை கோட்டமட்டப் போட்டிகளில் நடுவர்களாக மட்டும் கலந்து கொள்கின்றனர் என்பது இங்கே சுட்டிக் காட்டத்தக்கது.

யாழ். பெருநிலப்பரப்புடன் தரைவழியாகத் தொடர்புபட்ட பாடசாலைகளை விட, தீவக பாடசாலைகள் இது தொடர்பில் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றன.

நெடுந்தீவுப் பிரதேசப் பாடசாலை மாணவர்களிடையே இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளின் வீரர்களது திறமைகள் எதுவும் பதியப்படுவதில்லை என்பதுடன், அது தொடர்பான ஊக்கங்கள் கூட மாணவர்களது மத்தியில் அற்றுப் போய்விட்டது.

இந்த வகையில், நெடுந்தீவு கோட்ட மட்டப் பாடசாலைக்கென்று இல்லாவிட்டாலும் - கோட்டத்திற்கு ஒரு விளையாட்டுத் துறை ஆசிரியராவது நியமனம் செய்யவேண்டும்.

நெடுந்தீவுக் கோட்டத்தில் வெற்றி பெறும் மாணவர்களில் பலர் - வலயம், மாவட்டம், மாகாணம் எனக் கடந்த காலங்களில் சென்று வருவர். இந்த வகையில் தற்போதும் இது தொடர்பான திறமையான மாணவர்கள் உள்ளபோதும், அவர்களுக்கான போதிய பயிற்சிகள் இன்றியும், இது தொடர்பாக ஊக்கப்படுத்தல் இன்றியும் கோட்டமட்டத்துடன் மட்டும் நின்று விடுகின்றனர்.

அத்துடன், சற்றுத் திறமையுள்ள மாணவர்கள் தங்களை வளப்படுத்த அதிபர்களது உதவியுடன் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களது உதவிகளைப் பெற்றுவருவதுடன், அதன் மூலம் பெரும் பயனும் அடைந்துள்ளனர்.

இந்த வகையில் நெடுந்தீவுப் பிரதேசப் பாடசாலை மாணவர்களது விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்டவர்களும், அதிகாரிகளும் அக்கறையெடுத்து -கோட்டத்துக்கு ஒரு விளையாட்டுத்துறை ஆசிரியரை நியமிக்க வேண்டும் என நெடுந்தீவுப் பிரதேச மாணவர்கள், பெற்றோர்கள் எதிர்பார்த்துக் காத்துள்ளனர்.

# அரசியல் ஏமாற்று நாடகங்களால் பாதிக்கப்படும் பட்டதாரிப் பயிலுநர்கள்

கல்விக் கலைத்திட்ட முறைமையில் - பாடசாலை ரீதியான இறுதி வெற்றி எனக் கொள்ளப்படுவது பல்கலைக்கழக அனுமதிகளே. இவ்வாறு பாடசாலைகளில் அர்ப்பணிப்புக்களுக்கூடாக வெற்றிகண்டு, பல்கலைக் கழகம் சென்று, அங்கும் ஆழமான பல தேடல்கள் ஊடாக பல தடைப் பரீட்சைகளைத் தாண்டி, பட்டத்தைப் பெற்று, பட்டதாரிகளாக 27 வயது தொடக்கம் - 35 வயது வரையான காலப்பகுதி வரை சொந்த உழைப்பின்றி, பல பந்த பாச பாரங்களுடன் வெளியேறுகின்றனர் இந்தப் பாவப்பட்ட பட்டதாரிகள்.

கல்வி கற்றும், தமக்கொரு விடிவின்றி பட்டதாரி சங்கங்களில் பெயர்களைப் பதிந்து விட்டு காத்திருந்த இந்தப் பட்டதாரிகளை - தற்போதய அரசாங்கம் தனது அரசியல் நாடக இலாபங்களுக்காகப் பயன்படுத்தியுள்ளது என்பது தற்போது இடம்பெறும் பட்டதாரிகள் நிரந்தர நியமன நகர்வுப் போக்குத் தாமதத்தினூடாகத்தான் புலனாகிறது.

இந்த விடயத்தைச் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் தெரியும் எந்த அளவுக்குப் பட்டதாரிகள் ஏமாற்றப்படுகின்றனர் என்பது. கடந்த 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பட்டதாரி நியமனத்துக்கான முன்பயிற்சி என்கின்ற பேரில், 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவோடு அமர்த்தப்பட்டார்கள். ஏதோ தெரியாத தொழிற்பயிற்சியைத் தெரியவைப்பது போன்று, அனைத்துதொழிற்துறையினருக்கும் ‘கும்பலில் கோவிந்தா’ என்றது போல் பயிற்சி அழித்து, நாளைக் கடத்தியது எமது அரசாங்கம். பின்பு 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் - முறையற்ற ஒழுங்குமுறையில், சுயவிருப்பு என்கின்ற பேரில், வெவ்வேறு திணைக்களங்களில் கடமையாற்றப் பணிக்கப்பட்டது. இது பற்றியும் பலகுளறுபடிகள் நாளுக்கு நாள் ஏற்பட்டு வந்தது. தொடர்பற்ற துறை வேலைகள் அற்றதன்மை என்ற பல பிரச்சினைகளாலும் இந்தப் பட்டதாரிகள் விரக்தியடைந்தனர். இப்படியாக 5 மாத காலத்தை உருண்டோட விட்ட அரசாங்கம் - தற்போது இந்தப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய சேவையில் நிரந்தர நியமனம் வழங்க, ஒரு பரீட்சை இடம் பெறும் என்றும், அந்தப் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் தான் உள்வாங்கப்படுவர் என்றும், வேதனைக்குரிய வார்த்தைகளை வேடிக்கையாகப் பேசுகிறது சந்திரிகா அரசாங்கம். அப்படியானால் மிகுதிப் பேரின் நிலையென்ன?

இவையெல்லாம் வினாக்களாகவும், வேதனைக்குரிய வேடிக்கைகளாகவும் பட்டதாரிகள் மத்தியில் பரிமாற்றப்படுகிறது.

தனது ஆட்சியில் எதிர்க் கட்சிகள் மத்தியிலும், சர்வதேசத்தின் மத்தியிலும் சவால் காட்ட வேண்டுமென்பதற்காக - நிலையான திறைசேரி நிதி ஒதுக்கீடு இல்லாமல், எமது அரசாங்கம் போட்ட போலி நாடகங்களால் தாக்கப்பட்டது பாவப்பட்ட பட்டதாரிகளே.

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் - இத்தனை காலமும் சேவையாற்றிய சேவைக் காலங்கள் கணக்கிலெடுக்கப்படமாட்டாது, ஊழியர் சேம லாபநிதி வைப்புச் செய்யப்படமாட்டாது, ஊழியர் நம்பிக்கை நிதியம் வைப்புச் செய்யப்படமாட்டாது, வருடாந்த சம்பள உயர்வுப்படி வளங்கப்படமாட்டாது, கஸ்டப்பிரதேச கடமைக் காலம் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது, மேலதிகக் கொடுப்பனவுகள் வளங்கப்படவில்லை, வெறும் ஆறாயிரத்தோடு மாத்திரம் இத்தனை காலமும் ஏமாற்றப்பட்ட இந்தப் பட்டதாரிகளுக்கு, இனியும் விடிவுகள் இல்லாமல் - இனியொரு பரீட்சை, இனியொரு வெட்டுப்புள்ளியென்றால், இதை அநீதியென் பதா?.... அடக்குமுறை யென்பதா? .... இனவாதமென்பதா?... அல்லது ஏமாற்றுகிற தற்போதய அரசாங்கத்தின் ‘முதுகடி’யென்பதா?...

- ஆர்.கே.மேனன்

# மாமனிதர் சிவராம் நினைவு நிகழ்விலிருந்து...



## இலங்கைத் தீவின் இன்றைய நிலை

# தமிழ்த்தேசியம் குறித்து எழுதுபவர்கள் இளவயதிலேயே கொல்லப்படுகின்றனர்

## யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள் கண்டனம்

இலங்கைத் தீவில் பேனாவைத் தூக்கி, பேரினவாத விஷத்தைத் தெளித்தவர்கள் தலை நரைத்து, முதுமையாகி இயற்கை மரணம் அடைகின்றார்கள். ஆனால், தமிழ்த்தேசியவாதம் பற்றி எழுதியவர்கள். மிக இளம்வயதிலேயே படுகொலை செய்யப்படுகிறார்கள். இது எத்திசை நோக்கி துப்பாக்கி தனது துரோகத் தனத்தைக் காட்டுகின்றது என்பதை நன்றாகப் பிரதிபிம்பப்படுத்துகின்றது.

இவ்வாறு ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களும், கலை இலக்கியவாதிகளும் விடுத்துள்ள அறிக்கையில் தெரி வித்துள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உலக ஊடகவியலாளர் தினம் கொண்டாடப்படுவதற்கு இரு தினங்கள் முன்பாக - உலகறிந்த ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சுதந்திர சிந்தனையாளனும், சுதந்திர ஊடகவியலாளனுமான சிவராம் இப்படிப் பழிவாங்கப்பட்டிருப்பது வெறும் தனிமனிதக் கொலை அல்ல. சுதந்திரங்கள் யாவற்றுக்குமே அடிப்படையான கருத்துச் சுதந்திரத்தில் கைவைக்கும் செயலானது, ஜனநாயகத்தின் ஆணிவேரை ஆட்டங்காண வைப்பதுடன், அராஜகம் நோக்கியும் இட்டுச் செல்கிறது.

சுதந்திர ஜனநாயக சோசலிசக் குடியரசு என்று தன்னை அழைத்துக்கொள்ளும் இலங்கையில் - சிவராமின் படுகொலைதான் இந்த வகையில் முதலாவதன்று. கருத்து, சிந்தனை, அறிவு இவற்றின் மீதான தொடர்ந்த, திட்டமிட்ட வக்கிர அழிப்புக்களில் ஆகப் பிந்தியதே அது.

1981ஆம் ஆண்டில் யாழ்.பொது நூலகமும், ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் படையினரால் எரியூட்டப்பட்டமை, 1987 ஆம் ஆண்டில் ஈழமுரசு மற்றும் முரசொலி பத்திரிகை நிறுவனங்கள் இந்தியப் படைகளால் குண்டுவைத்து அழிக்கப்பட்டமை என்று தொடங்கி 1990 ஆம் ஆண்டு ரிச்சாட் டி சொய்சா, 19.10.2000 அன்று நிமலராஜன், 06.01.2000 அன்று குமார் பொன்னம்பலம், 31.05.2004 அன்று நடேசன் என்று தொடர்ந்து கேள்விமுறையின்றி நீண்டுசெல்லும் கொடூரத்தின் இதுவரையிலான கடைசி இலக்கே சிவராம். லசந்த விக்கிரமசிங்கவின் முறைப்பாடு தொடர்ந்தும் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. பேனாவைத் துப்பாக்கியால் எதிர்கொள்ளும் அராஜகம் இங்கு புதிதன்று என்பதையே இது காட்டுகிறது. இதற்கு முடிவு எப்போது?

சரியான தகவல்களையும், தரவுகளையும் உலகின் முன்வைக்கும் ஒரு ஊடகவியலாளன் பழிவாங்கப்படுகிறான் என்பது அவனுடைய தொழில் தர்மத்தில் குறுக்கிடுவதோடு, அவன் தொழில் சுதந்திரத்தைப் பறிப்பது என்றும் ஆகிறது.

எனவே, இது இன்னொரு விதத்தில் சரியான தகவல்கள், தரவுகளை அறிந்துகொள்ளும் உரிமையும் உலகத்தவர்களுக்கு இதன் மூலம் மறுக்கப்படுகிறது. ஊடகவியலாளனின் பணியிலும் பார்க்க அந்தப் பணியை அவன் செவ்வனே நிறைவேற்றுவதற்காக அவனுக்களிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு பன்மடங்கு முக்கியமானது.

இலங்கையில் தற்போது நிலவும் சூழலில் மிக முக்கியமான நெருக்கடியும், பாரிய பொறுப்பும் நிறைந்த நிலையில் எதிர்காலம் பற்றிய தீர்க்கமான, நியாயமான, புத்திசாதுரியமான முடிவினை - இலங்கை மக்கள் மட்டுமன்றி, இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களும், ஆட்சியாளர்களும்கூட எடுக்கவேண்டிய இந்தத் தருணத்தில், அவர்களெல்லோருக்குமே உண்மை அறியும் வாய்ப்புக்கள் மறுதலிக்கப்படும் முனைப்பாகவே இந்தக் கொலை கருதப்படவேண்டும். இந்தத் தகவலறியும் சுதந்திரம் அபகரிக்கப்படுவதானது, இலங்கைத் தீவின் வரலாற்றுத் துரோகமாகவும் அமைகிறது.

அதுமட்டுமன்றி இந்தச் செயலானது, மீதி உலகுக்கும் ஒரு மிகத்தவறான முன்னுதாரணமாகவும், மக்களையும், அவர்தம் உரிமைகளையும் அடக்கியொடுக்கும் அராஜகவாதிகளுக்குத் தூண்டுகோலாகவும் அமையும் ஆபத்து சாத்தியம் நிறைந்தது.

பத்திரிகையாளர்களினதும், மக்களினதும் கொள்கை வகுப்பாளர்களினதும், ஆட்சியாளர்களினதும் - ஆரோக்கியமான, இயல்பான, பாதுகாப்பான, எதிர்கால முன்னகர்வு நோக்கிய, செயற்பாடுகள் செம்மையுற நடைபெறுவதற்கு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு எல்லா விதங்களிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது.

இலங்கையைப் பொறுத்தளவில் இந்தக் கொலைவரிசையில் இதுவரை எந்தக் கொலையிலாவது குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சரித்திரமே இல்லை. விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதற்கு மேலாக விசாரணைகள் முன்நகர்ந்தது கிடையாது.

சிவராமின் கொலையைப் பொறுத்தளவில் அவர், தலைநகரின் மிக முக்கிய பகுதியொன்றில் பிரதான காவல் நிலையமொன்றின் கண்ணெதிரே கடத்தப்பட்டது மட்டுமன்றி, இரண்டு மணி நேரத்துக்குள் படுகொலை செய்யப்பட்டு அவரது உடல் நாடாளுமன்றின் அயலிலேயே அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது என்பதும் எமது கவனத்தைக்கோரும் ஒன்றாகும்.

எனவே, மெய்யான குற்றவாளிகள், சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு முன்பு குறிப்பிட்ட மாதிரியான, பெயரளவிலான, விசாரணைக்குழுக்கள் உதவப்போவதில்லை என நாம் திடமாக நம்புகிறோம். விரைவில் சுதந்திர சர்வதேச விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பதை எமது முக்கிய கோரிக்கையாக விடுக்கின்றோம். அது மிக விரைவில் அமைக்கப்படும் என நம்புகின்றோம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புகழேந்தியை அவரது ஓவியங்களூடாக நாம் உள்வாங்கிக் கொள்கிறோம்!

## விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன்

(கிளிநொச்சி)

ஓவியர் புகழேந்தியை அவரது ஓவியங்களூடாக எமது மண்ணில் உள்வாங்கிக் கொள்வதாக, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தில் ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு தொடக்கவுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே மீள் சந்திப்பு நாளாக, ஒரு மீள் எழுச்சி நாளாக, நன்றிக் கடன் செலுத்தக் கூடிய நாளாக, அன்பினை பகிர்ந்து கொள்ளக்கூடிய நாளாக இந்த நாள் அமைகிறது.

தமிழ்நாட்டில் நாம் தங்கியிருந்த நாட்களில், தமிழ் நாடே எமது முன்னணி களமாக இருந்த நாட்களில், தமிழ் இனமான உணர்வில் ஒன்று பட்டு, விடுதலைப் போராட்டத்தின் வீச்சின் பால் ஒன்று பட்டு, சர்வதேச மனித நேய அடிப்படையில் ஒன்று பட்டு அன்று உருவான தோற்றப்பாட்டின் வெளிப்பாடாக இன்று இச்சந்திப்பு நடைபெறுகின்றது.


புகழேந்தி, எமது மண்ணில் இருந்திருந்தால் போராளியாக இருந்திருப்பார். தமிழ் நாட்டிலே ஓவியப் போராளியாக உள்ளார். எங்கள் மனங்களிலே கனன்று கொண்டிருக்கும் விடுதலைத் தீ - புகழேந்தியின் மனத்திலும் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. தமிழ் நாட்டவரும் தமிழீழ நாட்டவரும் ஒருவருக்கொருவர் இணைப் போடும், பற்றோடு நன்றியறிதலோடும், கொள்ளக் கூடிய ஒரு சம்பவத்தின் வெளிப்பாடாக இந்நாள் அமைவதாக எண்ணி மகிழ்வடைகிறோம்.

நண்பர் புகழேந்தியை எமது மண்ணிலே உள்வாங்கிக் கொள்கிறோம். அவருடைய ஓவியங்கள் ஊடாக அவரை உள்வாங்குகிறோம். கியூபா விடுதலை பெற்றதன் பின்னர் கியூபாவின் முதற்குடிமகனாக சேகுவேராவை வைத்துக் கொண்டார்கள். அதேபோல தமிழீழத்திலே ஒரு நாளைக்கு புகழேந்தியை வைத்துக்கொள்ளக்கூடிய நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த நம்பிக்கையின் எழுச்சியாக இந் நாளை கருதுகிறோம்.

தனது ஓவியங்களை உலகமெல்லாம் கொண்டு சென்று காட்சிப் படுத்தியவர் எமது மண்ணிலேயும் தனது ஓவியங்களை காட்சிப்படுத்தியுள்ளார். போராட்டம் நடக்கும் மண்ணிலே எழுச்சி உருவாக்கும் வகையில் அவருடைய ஓவியங்களை காட்சிப்படுத்தியுள்ளார்.

புகழேந்தியின் ஓவியங்கள் கடுமையானவை அல்ல. சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வரையப்பட்டுள்ளன. அதே வேளை, ஓவியங்கள் எளிமையானவையல்ல. பொருட்கள் பல பொதிந்தன. நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாக ஓவியங்கள் அமைந்துள்ளன எனத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10.40 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் -



தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

ஓவியக்கண்காட்சியினை கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகம் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வுகள் கிளிநொச்சி அழகியல் கலாமன்ற அதிபர் கா.விஜயசேகரன் தலைமையில் இடம்பெற்றன.

ஓவியக் கண்காட்சி ஆரம்ப உரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் நிகழ்த்தினார்.

இவ் ஓவியக் கண்காட்சியினை பெருமளவு பாடசாலை மாணவர்களும் மக்களும் பார்வையிட்டு வ[illegible]கின்றனர். இன்றும் இக்கண்காட்[illegible] இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 16 பேர் கொண்ட புலிகளின் குழுவை கொழும்பு பொலிஸார் தேடுகின்றனர்!

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களெனக் கருதப்படும் 16 பேரடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு வந்தமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக்குழுவினர் கண்டியில் உதவி வழங்கும் மாநாடு ஆரம்பமாவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கொழும்பு வந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இவர்களில் இதுவரை ஐவரும் அவர்களது வானொன்றும் பிடிபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுடன் வந்த ஏனைய 11 பேரும் கிருலப்பனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, வத்தளை, கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் தங்கியிருப்பதாக குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினரும், பிஸ்ரல் குழுவைச் சேர்ந்தவர்களும் அடங்குவதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதுவரை வானொன்றிலிருந்து விடுதலைப் புலிகளின் அனுமதிப் பத்திரமொன்று பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தகவலின் படி கொழும்பிற்கு வந்த 16 பேரும் குறிப்பிட்ட இடங்களில் இருந்து தமது செயற்பாட்டை மேற்கொள்வதற்காகவே வானிலிருந்து இறங்கிக் கொண்டதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (தே)

### முஸ்லிம்களுக்கென

# பொதுக்கட்டமைப்புக்கு தனியாக செயலகம் வேண்டுமாம்!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு கரையோரப் பிரதேசங்களை மீள்கட்டுமானம் செய்வதற்காக, முஸ்லிம் பொதுக்கட்டமைப்புச் செயலகம் உருவாக்கப்படவேண்டுமென தகவல் மற்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் ஷேகு இஸதீன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்கட்டுமானப் பணிகள் தாமதமடைவது குறித்து பிரதியமைச்சரை அவரது காரியாலயத்தில் சந்தித்த அம்பாறை மாவட்டப் பிரதிநிதிகளிடமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக இடம்பெற வேண்டுமென விரும்புகின்றனர். எனவே, அரசு மற்றும் புலிகள் போன்று தனித்தரப்பாக - மூன்றாவது தரப்பாக முஸ்லிம்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக முஸ்லிம்களுக்கு தனியான செயலகம் ஒன்று தேவை. ஏனெனில், சமாதான செயலகம் என்பது சமாதான் செயற்பாடுகளுடன் தொடர்புடையது. அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் அவர்களது சமாதான செயலகப் பிரதிநிதிகளே இந்தப் பொதுக்கட்டமைப்பில் பங்குபற்றவுள்ளனர்.

சமாதான செயலகத்தின் நோக்கம் வேறானது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் பொதுக்கட்டமைப்பிற்கும் சமாதான செயலகத்திற்கும் தொடர்பில்லையென ஏற்கனவே கூறியுள்ளனர்.

இவர்களின் இந்தக் கூற்று உண்மையாக இருக்குமானால், சமாதான செயலகத்திலிருந்து நியமிப்பதை விட, பொதுக்கட்டமைப் புக்கென தனியான செயலகம் அமைக்கப்படவேண்டும்.

நாம் பொதுக்கட்டமைப்புக்கு எதிரானவர்கள் அல்ல. அதனை நிபந்தனையுடன் ஆதரிக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## காணாமற்...

கண்டுபிடிக்கப்பட்டது. சடலத்தின் சில பகுதியில் பனம்மட்டை வெட்டிய காயம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் விசாரணை நடத்தியதுடன் சடலத்தை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ சோதனைக்குட்படுத்தி அறிக்கையை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதுடன் பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்.

## ஈ.பி.டி.பி...

உறுப்பினர் மோகனுக்கு கழுத்திலும் நெஞ்சிலும் நான்கு துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தன. படுகாயமடைந்த இவர், உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை யளிக்கப்பட்டது.

எனினும், சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் - காலை 10.30 மணியளவில் இவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

இவர்களில் வேலுப்பிள்ளை நவரத்தினம் (வயது 50) என்பவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அத்துடன், பாதுகாப்பு கடமைக்குச் சென்ற பொலிஸார் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

## புத்தர்...

ஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கடற்படைத்தள வீதியை பொலிஸார் மூடியுள்ளனர். இதன்மூலம் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதியிலிருந்து எவரும் சிலை வைக்கப்பட்டுள்ள பகுதிக்குச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் சகிதம் சிலையைச் சுற்றிவர நிற்கும் சிங்களவர்களில் சிலர், சிலையை அகற்ற நடவடிக்கை எடுத்தால் தாம் தீக்குளிக்கப்போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையால் திருகோணமலை நகரில் நேற்று இரண்டாவது நாளாக பதற்றம் நிலவியது. (10) (04)

## சிவராம் ...

தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம் பெற்றன.

தினக்குரல் ஆசிரியர் ரகுராம் வரவேற்புரை நிகழ்தினார்.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் கதிர்காமத்தம்பி, யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம், எழுத்தாளர் எஸ்.சாந்தன், தேசிய இலக்கியப் பேரவையைச் சேர்ந்த க.தணிகாசலம், தேசிய எழுச்சிப் பேரவைச் சேர்ந்த மா.இளம்பிறையன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் உரைநிகழ்தினர்.

நன்றியுரையை வலம்புரி ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த திருமால் நிகழ்த்தினார்.

# மக்கள் வங்கி வட்டி வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கி நிலையான வட்டி வீதங்களை அதிகரித்துள்ளது. இன்று தொடக்கம் மக்கள் வங்கி வைப்புக்ளுக்கான வட்டி வீதங்கள் 2 சதவீதத்தால் அதிகரிக்கப்படுமென நேற்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி ஒரு மாதத்திற்கான நிலையான வைப்புக்களுக்கு 7 சதவீதம் வருடாந்த வட்டி வழங்கப்படும். நீண்டகால நிலையான வைப்புக்களுக்கான வட்டி வீதம் 8 சதவீதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 378 படையினர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் பணியாற்றிய 34 அதிகாரிகளும் 344 படையினரும் நேற்றுமுன்தினம் ஹெய்டியிலிருந்து நாடு திரும்பினர்.

இவர்களுக்கு விமானநிலையத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி நாடு திரும்பிய படையினரை வரவேற்றார்.

# பால்மா விலைகள் அதிகரித்தன!

(கொழும்பு)

நியூசிலாந்து நிறுவன பால்மாக்களின் விலைகள் நேற்றுமுன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கிடைத்த நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நியூசிலாந்து பால்மா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி அங்கர் பால்மா 400 பொதியின் விலை 15 ரூபாவால் உயர்ந்து 165 ரூபாவாக விற்பனை செய்யப்படும். ஒரு கிலோ பொதி 46 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. இதன்படி புதிய விலை 406 ரூபாவாக இருக்கும்.

ரத்தி பால்மா 400 கிராம் பொதியின் விலை 140 ரூபாவிலிருந்து 158 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ 38 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. றெக்கே பால்மா 400 கிராம் விலை 26 ரூபால் உயர்த்தப்பட்டுள்ளது.

## சர்வதேச சமூகத்தின்...

கடந்த இரண்டு தசாப்தகால போர் மற்றும் சுனாமி பேரழிவால் தமிழ் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

எனவே அவர்களுக்கு சர்வதேச உதவிகள் தேவையாகும் என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாடுகளை இலங்கை அரசிடம் எடுத்துக்கூறுவதாக விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த சொல்ஹெய்ம் - இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடல்கள் குறித்து அவர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு விளக்கிக் கூறினார்.

இந்தச் சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திடீரென முளைத்த...

நிறுவப்பட்டமை குறித்து திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு எழுத்து மூல முறைப்பாட்டைத் தெரிவித்திருந்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக நேற்றுக் காலை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை நகரசபை விசேட ஆணையாளர் மற்றும் செயலாளர் தாக்கல் செய்திருந்தனர்.

பொலிஸ் தரப்பில் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த மற்றும் தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணரத்ன ஆகியோர் இந்த வழக்கில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கின் நான்காம் கட்சியாக ஐக்கிய ஓட்டோ சாரதிகள் சங்கச் செயலாளர் அ.கீர்த்தி பிரியலால், 5 ஆம் கட்சியாக தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இதில் ஓட்டோ சாரதிகள் சங்க செயலாளர் அ. கீர்த்தி பிரியலால் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கவில்லை.

இந்த நிலையில் திருகோணமலை நகரில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பதற்றத்தைத் தணிக்கவும், சமாதான சூழலைப் பேணவும் பொலிஸார் [illegible]வடிக்கை எடுக்கவேண்டுமென்று நீ[illegible]பதி தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

நகரசபைக் காணியில் அமைக்கப்பட்ட மேற்படி சிலையை தற்காலிகமாக அகற்றவிட்டு, அதன்பின்னர் நகரசபை இது தொடர்பான தமது சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டது.

தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன், ஐக்கிய ஓட்டோ சாரதிகள் சங்க செயலாளர் அ.கீர்த்தி பிரியலால் ஆகிய இருவரும் நகரில் அமைதிநிலையும் இயல்புநிலையும் ஏற்பட பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, பொலிஸார் புத்தர் சிலையை தற்காலிகமாக அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டதன் பின்னரே ஹர்த்தாலை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து தாம் ஆலோசிக்க முடியுமென்று வ.விக்னேஸ்வரன் கூறினார். (10) (04)


## பணிநிலை வேண்டுகை

நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் கீழ்க்காணும் பணியாளருக்கான வெற்றிடங்கள் உள்ளன.

திறமையும், ஆர்வமும், தகைமையும் உடையோர் 26.05.2005 அன்று காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

### இயந்திர இயக்குநர் / அச்சு இயந்திர உதவியாளர்கள்

**இயந்திர இயக்குநர்**

KORD மற்றும் SOLONA இயந்திரங்களில் வண்ண அச்சு வேலைகள் செய்யக்கூடிய அனுபவத்தகைமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

**அச்சு இயந்திர உதவியாளர்கள்**

மேற்படி இயந்திரங்களில் அச்சிடல் வேலை பழக விரும்பும் ஆர்வமுடையவர்களாக இருக்க வேண்டும்.

நிர்வாகப் பணிப்பாளர்,
நமது ஈழநாடு.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.